



பதிவு எண் 2041 — மகாத்மா காந்தி வாழ்க. — தனிப்பிரதி விலை அணா ஒன்று

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1–12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ தனி விகிதமும் உண்டு.

| மாலை 3 | ஈரோடு, பிரபவ-ஹு ஆனிமீ 12 உ (26—6—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 9. |
|---|---|---|



## மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.




☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- **T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப்பு வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.**

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— **ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.**

# வெடிகுண்டுகள்.

அ, ஆ, இ, ஈ.

தற்கால கல்வி நமது பெண்களுக்குத் தேவையில்லை. உத்தியோகம் பெறும் நோக்கத்துடன் அவர்கள் படிக்கவில்லை. தங்கள் புருஷர்கள் மெச்சும்படி நடை உடை பாவனைகளை கற்றுக்கொள்ளுகிறார்கள். புருஷர்களின் வருமானமோ பெண்களின் மேனிமினுக்குச் செலவுக்குச் சரிபாகப் போய் விடுகிறது. பெண்கள் செலவு செய்கிறவர்களாகவும், புருஷர்கள் தேடுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். 200, 300 ரூபாய் சம்பாதிக்கும் ஆண் மக்கள் குடும்பச் செலவில் அவதிப்படுகிறார்கள். இந்த மிக ஆபத்தான நிலைமை போக்க இந்துக்கள் உடனே முன்வரவேண்டுமென லாலாஜி கூறுகிறார். ஆனால் இதை எத்தனை குடும்பத்தார் கவனிக்கிறார்கள் என்பது யாருக்குத் தெரியும்?

ஃ ஃ ஃ

அ. இ. த. சீனிவாச ஐயங்கார் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். கதரை காங்கிரஸினின்று எடுத்துவிட வேண்டுமென்று கூறினார். ஆனால் காங்கிரஸ் மகாசபையானது பட்டினியாக வாழும் கோடிக்கணக்கான ஜனங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டுமானால் பாமரமக்களுக்கும் மேல் அந்தஸ்தில் உள்ளவர்கட்கும் ஒரு தொடர்பு இருக்கவேண்டுமானால் கதர் திட்டத்தை காங்கிரஸிலிருந்து எடுக்கக் கூடாது, கதரை காங்கிரஸ் ஆதரிக்காவிட்டால் மகாஜனங்களின் பிரதிநிதி சபை காங்கிரஸ் என்ற பெயர் போய்விடும். சீர்திருத்தக்காரர்கள், பிடிவாதக்காரர்கள் இவர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தின் ஸ்தாபனமாகத்தான் காங்கிரஸ் இருக்கும். இன்றைய தலைவர்கள் விரும்பினால் அது அவசியமெனப் பட்டால் கதர் திட்டத்தை காங்கிரஸிலிருந்து எடுத்து விடுவதை நான் ஆக்ஷேபிக்க இல்லை என்று மகாத்மா காந்தியடிகள் கூறுகிறார்.

ஃ ஃ ஃ

ஆனால் இன்றயக் காங்கிரஸ் காரர்கள் தம்மிடம் வரும்பொழுது மட்டும்தான் கதர் உடுத்துகிறார்கள் என்பதும் காங்கிரசை விட்டு வெளியில் இருக்கும் பெரும்பான்மையான ஜனசமூகம்தான் கத்தரை போற்றி வளர்த்து வருகிறதென்பதும் மகாத்மா காந்தியடிகளுக்குத் தெரியாது. இதே இரண்டு வாரத்திற்கு முன்பே நாம் கூறி இருக்கிறோம். மகாத்மா எந்தநிலை காங்கிரஸுக்கு வரக்கூடாது என்று பயப்படுகிறாரோ அந்த நிலை காங்கிரஸுக்கு வந்து ஓராண்டுக்கு மேலாகி விட்டதல்லவா?

ஃ ஃ ஃ

இந்து சமூகம் சீற்குலைந்திருப்பதற்கு பார்ப்பனர்கள்தான் காரணம் சாதாரண பார்ப்பனைவிட முற்போக்கடைந்துள்ள வைசியனை நான் மேலாக கருதுகிறேன் பார்ப்பனன் பிறப்பினால் தனக்கு ஒரு மேன்மை இருப்பதாக நடிக்கிறான் அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. பார்ப்பனன் தனது புராதன யோக்கிய நிலைக்கு வந்த பின்பு ஜனசமூகத்திற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று ஸ்ரீமதி சாராளா தேவியம்மையார் கூறுகிறார்.




பழநி சி. எம். சாமி

## குருதாம்பரபஸ்பம்.

சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பந்து மேகம், தடிப்புகள். மாறி விட்டது ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100 வேளைபற்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுப்பானமும்விலை ரூ. 25 எழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி.—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகிஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூணர் குணமாகி போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது மேகவியாதியால் ஒன்னரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நிர் மார்க்கம் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

எராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபிஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை


இவ்வுண்மையை தமிழ் நாட்டார் நீண்ட நாட்களாகச் சொல்லி வருகிறார்கள். இதன் பயனாகவே முதலியாரும், செட்டியாரும், நாயுடுவும், நாயக்கரும், பார்ப்பன அரசியல் புரட்டுக்காரர்களால் தூற்றப்படுகிறார்கள் என்பது அவ்வம்மையாருக்குத் தெரியாதல்லவா

ஃ ஃ ஃ

தேசபந்து திருநாள் கொண்டாடப்படுகிறது. அவர் திருநாளில் அரசியல் புரட்டுக்காறர்கள் பெரிதும் ஆர்பாட்டம் செய்கிறார்கள். "சுயராஜ்ஜியக்கக்ஷி ஒன்றை யேற்படுத்தித் தங்களின் வஞ்சனைக்கு ஆயுதமாகச் செய்துகொள்ள சங்கர்ப்பமளித்த தேசபந்துவை இத்தேசத்துரோகிகள் போற்றுவதானது திருடி விட்டு திருட்டுச்சொத்துகிடைத்ததற்கு கடவுளுக்குபூஜைபோடுவது போல்தான் இருக்கிறது

ஃ ஃ ஃ

உத்தமதேசபக்தரான அப் பெரியாரின் தியாகமும், வீரமும் இதிலிருந்து நாட்டில் உள்ள மக்களுக்குஉணர்ச்சியை உண்டாக்கி அவர்கக்ஷியையும், அவர்பெயரையும்தங்களின்தீயவழிக்கு உபயோகப்படுத்திக்கொண்ட சுயநலக்காரர்கட்கு நல்ல புத்தியை உண்டாக்குமென்று நம் நம்புவதை தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் தேச பந்துவின் அன்மா ஒப்புக்கொள்ளுமல்லவா?

நண்பர் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் குளிர்ச்சிக்காக உதகமண்டலம் சென்றிருந்தார். யார் பாபத்தாலோ அங்கும் தீ பிடித்ததாம். ஆபத்து யாருக்குமில்லை என்று அறிய மகிழ்கின்றோம். அந்த அசம்பாவிதமான ஆபத்தில் வெளிவந்த ஒருவர் நல்லவேளையாக சில விட்டங்கள் மட்டும் எரிந்துபோயிற்று பக்கத்தில் மேஜையின்று இருந்த அந்த கட்டுமட்டும் எரிந்திருந்ததால் என்று சொன்னாரும். இதன் உண்மை நமக்கு தெரியுமா?

அயர்லாந்து வீறான டிவாலரா கக்ஷிக்குச் சமீபத்தில் நடந்த தேர்தலில் பெறும்பான்மையான ஸ்தானங்கள கிடைத்தும் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்துச் சர்க்காரை நடத்த ஒப்புக்கொள்ளவில்லை அவர்கள் அயர்லாந்தின் விடுதலைக்குக்காரணபூதர்களாக இருந்தவர்களின்வாக்கையும்தங்கள் சுயமரியாதையையும்நிலை நாட்டிவிட்டார்கள்இதைஉலகம்போற்றுகிறது.

ஆனால் நமது இந்தியச் சுயராஜ்ஜியக்கக்ஷிக்கு அதைப்பார்த்து புத்திவருமென்று நினைப்பது பகற் கனவுதான் என்றாலும் அயர்லாந்தின் நற்கால பயனாக திரு அரங்கசாமி ஐயங்காரும் திரு ஸி. பி. ராமசாமி ஐயரும் திரு சீனிவாச ஐயங்காரும் அங்கு பிறக்காமல் போனார்கள். ஐரோப்பியரும் ஆரியரும் ஒரே வகுப்பு என்கிற சொந்தம் பாராட்டி இவர்கள் அங்கு போகாமல் இருப்பது நமது துர் அதிர்ஷ்டமும் அவர்களின் நற்காலமுமேயாகும்.

# பிராமணனைக் குற்றம் சொல்லுவது ஏன்?

## பிராமணத்தன்மையினின்று நீங்கினதினால் மட்டுமென்று

முன் தொடர்ச்சி;

(கைவல்யசாமியார் எழுதுவது)

இந்த வியாசத்தை திருத்தியிருந்தேன். துவாரில் கூடிய பிராமண சம்மேளனத்தின் தலைவரும் வரவேற்புத் தலைவரும்செய்தபிரசங்கம் எம்மை மறுபடியும் இந்த வியாசத்தை எழுதத் தூண்டிற்று. பிராமண சமூகக்குறைகளைச் சீர்திருத்திக்கொள்ளச் செய்யும் ஏற்பாட்டில் யாருக்கும் ஆக்ஷேபணையில்லை. இன்னொரு ஜாதியார் தங்களிடம் நடந்துகொள்ளுவதற்குச் சுவதர்மம் கற்பிக்கிறார்களே ஒழிய தங்கள் சுவதர்மமென்ன? தாங்கள் நடந்துகொள்ளவேண்டிய முறை என்ன? தங்கள் ஒழுக்கமென்ன? தாங்கள் மற்றவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய விதி என்ன? என்பதில் கவலையே இல்லை. பிராமண தர்மத்திற்கு ஒவ்வாத இழித்தொழிலைச்செய்து பொருள் தேடி இங்கிலீஷ் நாகரீகத்தில் வாழ்ந்துகொண்டு மற்றவர்கள் முன்னேற்றத்திற்குத் தடையாகச் சுவதர்மம் கற்பித்துப் புராணங்களை மேற்கோள் காட்டித் தங்கள் இழிந்த தொழிலையும் தன் காரியக் குணத்தையும் தாங்கள் அடைந்துவரும் நன்மையையென்றும் ஸ்திரமாக்கிக்செய்துவரும் ஏற்பாட்டிலும் நானும் என் கூட்டாளிகளும் குற்றம் சொல்லுகிறோம். இதில் அநேக விஷயங்கள் இருக்கின்றன. எழுதவேண்டிய விஷயங்களும் அநேகமிருப்பதால் கவனிக்கவேண்டிய இடத்தின் முக்கியத்தைப் பற்றி மட்டுமிதிலெழுதுகிறேன். சபைத் தலைவரும் உபதலைவரும் பாரதத்திலிருந்து மேற்கோள்கள் காண்பித்திருக்கிறார்கள். பரமாத்ம லக்ஷணம், ஜீவாத்ம லக்ஷணம், ஜீவேஸ்வர சம்பந்த லக்ஷணம், முக்தி லக்ஷணம், என்னும் நித்திய தத்துவங்கள் அடங்கிய உபநிஷத்துகளான வேதம் இந்துக்களுக்குப் பிரமாணமே ஒழிய புராணம் பிரமாணமன்று. இதை ஆட்சேபிக்கமுடியாது. "ராகு கேது என்கிற பாம்புகள் சந்திரசூரியர்களை அநேக தூரத்திற்கப்பாலிருந்து மறைக்கிறதென்றும்விழுங்குகிறதென்றும் ஆதிசேஷன என்னும் ஆயிரந்தலையுடைய பெரிய பாம்பு பூமியைத் தாங்குகிறதென்றும் ஏழுகுதிரை பூட்டிய தேரில் சூரியன் சவாரி செய்கிறான்" என்றும் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி விஷயங்களைப் பள்ளிக்கூடத்துச் சிறுவகுப்புப் பையன்கள்கூட ஒப்பமாட்டார்கள். இதைச் சாஸ்திரங்களில் சரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் சுருதிகளே பிரமாணம் சுருதியில் வித்தியாசமில்லை. அதை ஜனங்களுக்குச் சொன்னால் தங்கள் உயர்வு கெட்டுப்போகுமென்று அநேக நாளாக மறைத்துச்செய்த மோசடியை அச்சில்வந்து அநேகர் தெரிந்து அறிவுவிர்த்தியாகி ஆங்கிலத்தால் ஆங்காங்கு இரைந்துகிடக்குமிந்தக் காலத்தில் அதேமோசடியைச்செய்ய வருகையில் இவர்களைக் குற்றம் சொல்லாதிருக்க முடியுமா? அந்த மோசத்திற்கு உள்பட்டு அவர்கள் கூடச்சேர்ந்து அவர்களால் சில நன்மைகளையும் அடைந்து தன்னைத்தானே மதித்துத் தன் படிப்பைப் பாழ்பண்ணிக் கொள்ளுபவர்களுமிருக்கிறார்கள். அநேக பாப்பனர்களுக்குச் சுருதி என்பது இன்னதென்றே தெரியாது. புராணங்களிலுள்ள சில ஞாயங்களையும் தங்களுக்கு இப்பொழுதுள்ள பெருமைகளையும், அறியாமையால் நாம் அவர்களுக்குச் செய்யும் மரியாதைகளையும் நினைத்து அதையே இந்துமதமென்று நினைத்திருக்கிறார்கள். வேத சுருதியே இந்துமதமென்றும் அதிலுள்ள பிரமாணங்களே சுவதர்ம நிர்ணயத்திற்குப் பிரமாணமென்றும்சொல்வதானாலும் இப்பொழுது அவர்கள் சுவதர்மத்திற்கு எதைப் பிரமாணமாகக்கூறுகிறார்களோ அதிலிருந்தே சுவதர்மங்களைச் சொல்லுகிறோம்.

பாரதம் சாந்தி பருவம் 97-வது அத்தியாயம் சொல்லியிருக்கும் பிராமண தர்ம லட்சணத்தைச் சொல்லுகிறேன், "ஜாதகர்ம முதலிய ஸமஸ்காரங்களைப் பெற்றவனும், பரிசுத்தனும், வேதாத்யயனஞ் செய்தவனும், யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், வேதம் ஓதல், வேதம் ஓதுவித்தல், தானம் செய்யல், தானம் பெறல், என்னும் ஆறு கர்மங்களில் நிலைபெற்றவனும், பரிசுத்தியிலும், ஆசாரத்திலும்நன்றாக இருப்பவனும், அதிதிகளுக்கு இட்டமிச்சத்தைப்புசிப்பவனும், எப்பொழுதும்விரதமுள்ளவனும், சத்தியத்தை விரதமாகக்கொண்டவனுமாயெவனிருக்கின்றானோ அவனே பிராமணனென்றுசொல்லப்படுகிறான். சத்தியமும் தானமும், துரோகமின்மையும், க்ரூரமின்மையும், பொறுமையும், தயையும், தவமும், எவனிடம் காணப்படுகின்றனவோ அவன் பிராமணனென்று சொல்லப்படுகின்றான். கர்மங்களினால் ஆசையையும் கோபத்தையுமடக்கவேண்டும். அவ்வடக்கமும் அப்படியே மனத்தை அடக்குவதும் பரிசுத்தமென்றுதெரிந்து சிரேயஸைக் கெடுப்பதற்காக வளர்ச்சியடையும் லோபத்தையும் கோபத்தையும் மிச்சமின்றி விலக்கித் தவத்தை மத்ஸரத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும். 'ஓ பிராமணா! எந்த மனிதனுடைய முயற்சிகள் யாவும் ஆசை என்னும் பந்தத்திலிருந்து விலகியிருக்கின்றனவோ எவன் செய்த ஹோமம் யாவும் பயனைவிடக் காரணமாகுமோ அவன் தியாகியும் புத்தியுள்ளவனுமாகவிருந்து இம்சைசெய்யும் ஸ்வபாவமில்லாமல் எல்லாப் பிராணிகளுக்கும் மித்திரனாகும் வழியில் சொல்லுகிறவன் எவனோ அவன் பிராமணன். ஆசைப்படத்தக்க பொருளைத்தள்ளிவிட்டுப் புத்தியில் இந்திரியங்களை வென்றவனாக இருக்கவேண்டும். இவ்வுலகமும் மேலுலகமும் இவ்விரண்டிலும் அசைவில்லாத பதத்தையடையவேண்டும். ஜயிக்க முடியாத பதத்தை ஜயிக்க விருப்பமுள்ளவன் எப்பொழுதும் தவமும் இந்திரியங்களடக்கமும் மனவடக்கமுள்ளவனும் ஆணுக்குக் காரணமானவைகளில் பற்றில்லாதவனும் தியானத்திலிருக்கிறவனுமாயிருக்கவேண்டும். வைராக்கியத்தாலே மோக்ஷமடைய வேண்டுமென்கிற ஆசைமேற்கொண்டு மற்ற விவகாரங்களைவிட்டு இருப்பவனே பிராமணன்.' இதுவே பாரதத்தில் பிராமண லக்ஷணமாகச்சொல்லி சுவதர்மமான இதைவிட்ட பிராமணர்கள் படிப்படியாய் கீழான ஜாதிக்கு வந்து கடைசியில் சண்டாளர்களாகிறார்கள்." 'வேசிமகனாயிருந்த இம்சையிலும் பொய்யிலும் பிரியமிருந்து லோபிகளாய் பரிசுத்தத்திலிருந்து நீங்கி சுத்தியும ஆசாரமும் இல்லாதவன் எவனோ அவன் சூத்திரன்" என்று பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஒத்துக்கொள்ளுகிறவன் ஒருவனுமிருக்கமாட்டான். முன சொன்ன தர்மமுடைய பிராமணனும் ஒருவனுமில்லை: இப்படி இருக்க தஞ்சையில் கூடிய பார்ப்பார்கள் "பிராமணர்கள் சூத்திரர்கள் ஆகிய இரண்டு ஜாதிகள் மட்டும் நம் தேசததிலிருக்கிறதே ஒழிய க்ஷத்திரிய வைசிய ஜாதிகள் இல்லை" என்று பிராமணச்சங்கத்தின்மூலம் சொல்லுகிறார்கள். இது அக்கிரமத்திலும் பெரிய அக்கிரமம்! யோக்கியமாகப் பேசுவதானால் பிராமணனும் சூத்திரனுமில்லை என்று சொல்லுவதுதான் சாஸ்திரத்திற்கும் உலக அனுபோகத்திற்கும் பொருந்தியதாயிருக்கிறது என்று சொல்லுவேன். எப்படியெனில் சாஸ்திரத்தில விதித்த பிராமண தர்மத்தோடு கூடின பிராமணன் எப்பொழுதில்லையோ அப்பொழுதே அப்படி ஒரு ஜாதி உலகத்தில் இல்லை என்பதற்கு என்ன தடை? சாஸ்திரத்தில் விதித்திருக்கும் லக்ஷணப்படி நான்தான் சூத்திரன் என்று யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அப்பொழுது இரண்டு ஜாதியுமில்லை என்று சொல்லுவதற்கு என்ன தடை? பாப்பார்களினாலேயே இரண்டு ஜாதி இப்பொழுதில்லை என்று சொல்லப்படுகிறது. சாஸ்திரத்தினாலும் உலக அனுபோக ஞாயத்தாலும் மற்ற இரண்டு ஜாதியும் இருக்கமுடியாது என்பது நிர்ணயிக்கப்படுகிறது. ஆனதால் நாலு வருணமும் வருணாசிரமமும் உலகத்திலில்லை. அது வேண்டியதுமில்லை. அது ஆளை ஏமாற்றி அடிமை கொள்ளுந் தொழில் இம்மாதிரி தங்கள் சுயநலத்திற்குஆக ஜனங்களை வஞ்சித்துப் பிழைத்து நாட்டைகெடுத்து நாசமாக்கினது போதுமென்றுதான் "குடியரசு" சொல்லுகிறது. வைசியனையும் க்ஷத்திரியனையும் பாப்பனன் இல்லை என்கிறானே இந்த இடத்தில்தான் பாப்பானின் நன்றி கெட்டகுணம் நன்கு புலப்படும் பார்பனச்சபைத்தலைவர் மலையாளத்து ஊட்டுப்பிரைச்சோற்றை உண்டுபடித்தவர். உபசபைத் தலைவர் தஞ்சாவூர் சத்திரத்துச் சோற்றை உண்டு படித்தபரம்பரை. கொச்சி திருவந்தபுரத்து ராஜாக்களுக்குப் பிராமண பந்தியில் போகலாம். இவர்களை "பொன்னுத்தம்பிரான்கள்" என்றும் சொல்லுவார்கள். அவர்கள் சோற்றைத்தின்று வளர்கிற வரையிலும் "பொன்னுத்தம்பிரான் சரியான க்ஷத்திரியர் எங்கள் பந்தியில் அவர்பாதம் படவேண்டும்" என்று சொல்லுவதும் கல்கத்தாவில் உத்தியோகம் கிடைத்த உடனே மலையாளத்து ராஜாக்கள் இவர்களுக்கு சூத்திரர்களாகிவிட்டார்கள் என்று சொல்வதானால் இந்தப்பார்ப்பார்களின் நன்றி கெட்ட தன்மைக்கு வேறு சாக்ஷி வேண்டுமா மலையாளத்துப் பாப்பானெல்லாம் ஊட்டுப்பிரைச்சோற்றை உண்டும் சோழதேசத்துப் பாப்பானெல்லாம் தஞ்சாவூர் ராஜா சத்திரத்துச் சோற்றை உண்டும் முன்னுக்கு வந்தவர்கள். அன்றியும் "க்ஷத்திரிய தர்மம் பிராமணனை இரக்ஷிக்கவேண்டியது, சத்திரம் கட்டுங்கள் ஊட்டுப்பிரைவையுங்கள்" என்று அவர்களிடம் சொல்லி அவர்களால் வேண்டிய நன்மைகளையடைந்துவிட்டு இப்பொழுது அவர்களை க்ஷத்திரியரல்லர் என்று சொல்லுவதானால் வேறு என்ன என்பது தொக்கி இருக்கிறதென்பதை நீங்களே தீர்மானம்செய்துகொள்ளுங்கள். சிவாஜியிடம்முதற்கொண்டு இப்படியே சொல்லி பணம் அநேகரிடம் பறித்தார்கள். இப்பொழுது நம் இந்தியா தேசத்திலிருக்கும் சிற்றரசர்களிடம் தானம வாங்குவதிலும் மகுடாபிஷேகம் நடக்கையிலும் க்ஷத்திரியன் என்பதாகவேசடங்கு நடக்கிறது. அச்சடங்குகளை நடத்திவைத்து பூரி தக்ஷிணை தானதாமமும் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அதுபோலவே கோமுட்டி செட்டியார் முதற்கொண்டு பூணூல் போட்ட செட்டியார் வீடுகளிலெல்லாம், நல்லது கெட்டதுகளுக்கும் போய், 'நீங்கள்தான் சரியான வைசியாள். பிர்மாவின் வயிற்றிலிருந்து வந்தவர்' என்று சொல்லித் தான தர்மங்களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இந்தச்சமயம் யாராவது 'உங்கள் பிராமணச் சங்கத்தில் வைசியர்களும் க்ஷத்திரியர்களும் இல்லை என்று சொல்லிவிட்டார்களே. நீங்கள் மட்டும் எங்களை வைசியாள் என்று ஏமாற்றி பணம் பிடிக்கிறீர்களே"! என்றால் "அவன் கிடக்கிறான் மடையன். கல்கத்தா போய் ஜாதி கெட்டவன். பறையனோடு பறையனாகப் போவான். அவன் இங்கிலீஷ் படித்தானே ஒழிய சாஸ்திரமென்ன தெரியும்? நாலுநூறு ஐந்நூறு சம்பாதிக்கிற கொழுப்பு எங்கள் வாயில் மண்ணைவாரிபோடச் சொல்லுகிறது-" "ஆம் அய்யரே லால்குடியய்யரே?" அவன்

[இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.]

## கொழும்புக் கடிதம்

மகா-ா-ா-ஸ்ரீ "குடி அரசு" ஆசிரியர் அவர்களுக்கு இக்கடிதம் "கோயிற் பிரவேசம்" என்று ஒரு வியாசம் அனுப்பியிருக்கிறேன். "குடி அரசு" ஒவ்வொரு வாரமும் தவறாமல் வழிமேல் விழிவைத்து வாசிக்கப்படித்து வருகிறேன். இன்னும் பல்லோர்க்கும் சிபார்சும் செய்து வருகிறேன். தங்களின் இருதயம், உள்ளம், எண்ணம் "குடி அரசில்" வாரா வாரம் வெளிவந்துகொண்டிருக்கிறது. நீதியும், சத்தியமும் என்றும் வெற்றிபெறும். நாடார் பெருமக்களது குறை நாட்டில் முக்கியம் கவனிக்கப்படத்தக்கது; தங்கள் ஆதரவு இச்சமூகத்திற்கு என்றும் தேவை.

இத்துடன் அனுப்பியிருக்கும் வியாசத்தை முற்றும் படித்துப்பார்த்து தங்கள் மேலான அபிப்பிராயங்கள் அங்கீகரிக்குமேல் அடுத்து வரும் "குடி அரசில்" வெளியிடும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீமான நாயுடுகாரவர்களின் பதில் காணோம். ஸ்ரீ நாயுடுகாரவர்களையும், ஸ்ரீ முதலியாரவர்களையும் விட்டுவிடாதீர்கள். இணைந்து நமது முன்னேற்றத்திற்குத் தடைகல்லாயிருக்கும் பார்ப்பன மக்களை மும்மூர்த்திகளாய் நின்று எதிர்த்து முறியடித்து பெரும்பான்மையான நம் மக்களுக்கு நல்வாழ்வை நாட வேண்டுகின்றேன் தங்களுக்கு ஆண்டவன் வேண்டும் வரம் ஈவானாக சுபம்.

இங்ஙனம்

க. போ. சோமசுந்தரம்.

## கோயிற் பிரவேசம்.

ஸ்ரீமான் க. போ. சோமசுந்தர நாடார் எழுதுகிறார்.

**த**மிழ் நாட்டில் நன்மதிப்புடனும், பண்ணாளாகவும் நடைபெற்றுவரும் "லோகோபகாரி என்ற வாராந்தரப் பத்திரிகையில் மேற்கண்ட தலைப்பிட்டு திருச்சினாப்பள்ளி வக்கீல் ஸ்ரீமான் ஆர். நாராயண அய்யங்கார் எழுதியவைகளையும், "லோகோபகாரி"யின் அபிப்பிராயத்தையும் நன்கு படித்துப்பார்த்தோம்

ஸ்ரீ அய்யங்கார் "தாழ்ந்த வகுப்பினரை கோயில்களுக்குள் செல்ல விடவேண்டும் என்கிற இயக்கம்" என்று ஆரம்பிக்கிறார். "உபகாரி"யோ "சென்ற சில காலமாகத் தாழ்ந்தவகுப்பார் கோயிற் பிரவேசக்கிளர்ச்சி சில இடங்களில் தோன்றியிருக்கிறது" என்று ஆரம்பிக்கிறது. ஆகவே இருவரும் தாழ்ந்த வகுப்பார் என்று கூறுவதில் கூச்சமும், நாணமும் அடையவில்லை. இது பற்றி நாடார்குல மித்திரன் 13—6—27ல் கோயிற் பிரவேசம் என்று எழுதிய தலையங்கத்தில் கூறியிருப்பது போதும் எனினும் திருச்சியில் ஒரு பிரசங்கத்தில் பிராமணர்களைப் "பார்ப்பனப் பறையர்கள்" என்று ஒருவர் சொன்னார் என்றும் ஒரு தலைவர் "சுவாமிக்கு மாமிசத்தை வைத்து பூஜை செய்தால் என்னவென்று கேட்டார் என்றும், அதே தலைவர் "நாரதர் வண்ணாத்திக்குப் பிறந்தவர் என்றார் என்றும், இவ்வாறு கட்டுக்கடங்காமல் அர்த்தமில்லாமல் பேசக்கூடியவர்களுக்கு இவ்வியக்கத்தை நடத்த யோக்கியதை இல்லையென்றும்" கைகூசாமல்—பேனா முனை நடுக்குறாமல் எழுதும் ஸ்ரீ அய்யங்கார் "தாழ்ந்த வகுப்பினரை" என்று முதல் முதல் பேனாபிடித்து எழுதுவதென்பது "கோயிற் பிரவேசம்" என்பது பற்றி எழுதுவதற்கும் நினைப்பதற்கும் இவருக்கென்ன யோக்கியதையும் அதிகாரமும் அவசரமும் ஏற்பட்டு விட்டதென்று நாம் கேட்க விரும்புகிறோம்.

இதற்க, ஸ்ரீ அய்யங்கார் இவ்விஷயத்தில் பரோபகார சிந்தையுடையவனும், அநுதாபத்துடனும் முன் வந்ததை நோக்குமிடத்து எமக்கு ஒரு வித சந்தேகம் தோன்றுகின்றது. எம்பெருமான் காந்தி அடிகளை காங்கிரசினின்றும் துரத்தி "காங்கிரசை" பெரும்பான்மை யோரான தேசமக்களை அடிமைப்படுத்த சாதகமாக உபயோகிக்கும் கூட்டத்தாரின் ஆரோகச்செய்கையின் வண்ணம் "கோயிற் பிரவேசக்" கிளர்ச்சியை சதிசெய்து கெடுத்து விடக் கிளம்பிய அவதார மூர்த்தியோ என்ற எண்ணமேமேலிடுகின்றது. ஏனென்றால் பிராமணரல்லாதாருள்ளேயே கலகத்தை மூட்டி வேடிக்கை பார்ப்பதும், தங்கள் சுயநலத்தைத் தேடுவதும் அய்யங்கார், அய்யர், ஆச்சாரி மூர்த்திக் கூட்டங்களுக்கும், அர்ச்சகர் பார்ப்பனர், பஞ்சாங்கப் பார்ப்பனர், ஹோட்டல் பார்ப்பனர், காப்பிக்கடை பார்ப்பனர் சோத்துக்கடை பார்ப்பனர், உத்தியோகப் பார்ப்பனர், கதர்க்கடை பார்ப்பனர் முதலியவர்களுக்கும் வழக்கமாதலால் நாம சந்தேகம் கொள்ளவும் நேரிடுகிறது. ஸ்ரீ அய்யங்கார் எழுத்தில் இதற்கு ஆதாரம் இல்லாது போகவுமில்லை.

முதலாவது ஸ்ரீ அய்யங்கார் ஆரம்பிக்கும் போதே தற்காலம் இவ்வியக்கத்தை நடத்துபவர் ஸ்ரீமான் ஜே என். இராமநாதன் என்பவர் அவருடைய ராஜீய சரித்திரம் தமிழ் நாட்டாருக்கு நன்கு தெரியும். பற்பல துறைகளில் அலைந்து விட்டு மறுபடியும் "ஜஸ்டிஸ்" கட்சிப் பிரசாரகர்களுக்குள் ஒருவராய் விளங்குகிறார்." என்று ஸ்ரீ அய்யங்கார் எழுதுகிறார். ஸ்ரீமான் ஜே. என். ராமநாதன் அவர்களையும், அவர்களது ராஜீய சரித்திரத்தையும் "ஜஸ்டிஸ்" கட்சியையும் ஸ்ரீ அய்யங்கார் எள்ளி நகையாடுகின்றார் என்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் தலைவரென சொல்லப்படும் ஸ்ரீமான் அய்யங்காரவர்களுக்கு இவர் எவ்வகையிலும் பிற்பட்டவரல்லர். ஸ்ரீ ராமநாதன் யோக்கியதையைவிட அய்யங்கார் எவ்வகையில் முற்பட்டவர்?

மேலும் வக்கீல் ஸ்ரீமான் ஆர். நாராயண அய்யங்கார் "இவ்வியக்கம் (கோயிற்பிரவேசம்) வெற்றியடைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்கலாம்" என்கிற தலைப்பில் ஏழு நிபந்தனை கொடுக்கிறார். அவ்வேழு நிபந்தனைகளும் இயக்கத்தின் தலைவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களும், சத்யாக்ரஹிகள் கவனிக்கவேண்டிய விஷயங்களும் என்ற இருபாகு பாட்டிற்குள் அடங்கும். இவ்விஷயத்தில் தான் ஸ்ரீ அய்யங்காரின் "வக்கில்" திறமை காட்டப்பட்டிருக்கிறது. மூன்று நிபந்தனைகளின் பேரில் மட்டும் எமது கவனம் செல்கிறது.

(1) முதலில் இவ்வியக்கத்திற்கு தலைமையாயிருப்பவர்கள் எல்லாக் கட்சியினரின் நன்மதிப்பையும் பெற்றவர்களாயிருக்க வேண்டும்" என்று குறிப்பிடுகிறார். அஹிம்சாதர்மம், சத்தியம், சத்தியாக்ரஹம் இவைகளில் எவருக்கும் பின்னிடாத நம்பிக்கையும், அனுபோகமும் உள்ளவர்களும்; நமது தேசம் உண்மையிலேயே விடுதலையடைய வேண்டுமானால் கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல் ஆகிய நிர்மாணத்திட்டம் சாலச்சிறந்ததென்று சுதா தேச மக்களிடம் எடுத்தோதிய மகானுபாவரும்; அயல் தேச விடுதலைச் சரித்திரங்களை எவருக்கும் பின்னடையாமல் படித்து நம் தேச விடுதலைக்கு அவை பொருத்தமற்றது என்று கண்டுணர்ந்து மேற் கூறப்பட்ட திட்டங்களையும் இன்னும் பலவும் வகுத்துக்காட்டிய உத்தமர்—எம்பெருமான்—கலியுகக் கண்ணன்—மகாத்மா காந்தியடிகளை, "எக் கட்சியாருக்கும்" பொருட்படுத்தாமல் தங்கள் சுயநலத்திற்கென்று நாட்டையும் நாட்டின் பெரும்பான்மை மக்களையும் பாழ்படுத்தி காட்டிக்கொடுத்துவரும் சில படித்த பணத்தாசைப் பேய்பிடித்த சுயநலவாதிகள் பிரஸ்தாப கோயிற்பிரவேச இயக்கத்திற்கு நன்மதிப்புக் கொடுக்கப்போகுறார்களா! மகாத்மா காந்தியடிகளை வட நாட்டுப் பார்ப்பான் ஒருவன் சித்திரவதை செய்யவேணுமென்றும், தென்னாட்டு அய்யங்கார் பார்ப்பான் ஒருவன் மண்டையில் மூளை இல்லையென்றும் சொன்னதை நாட்டு மக்கள் மறக்கவில்லையே. ஆகவே இவ்வியக்கத்தை நடாத்த முன் வந்திருக்கும் தலைவர்களும்—வரப்போகும் தலைவர்களும் ஸ்ரீ அய்யங்காரின் "வக்கீல்" வாதத்தில் மயங்கிவிடமாட்டார்களென்று நம்புகிறோம்.

"இவ்வியக்கத்தை ஆரம்பிக்குமுன் பத்திராதிபர் தயவைச் சம்பாதித்துப் பத்திரிகை வாயிலாகவும்,........பிரசாரம் நடத்தவேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

பார்ப்பனர்களால் நடைபெறும் பத்திரிகைகளும், பார்ப்பன ஆதிக்கத்தால் நடைபெறும் பத்திரிகைகளும் இவ்வியக்கத்தை நசுக்க வழிதேடுமேயன்றி வேறெவ்வித உபகாரமும் செய்ய முன் வராது என்பது குன்றிலிட்ட தீபம். தேச க்ஷேமத்திற்கென்றுழைக்கிறோம். என்று கர்ஜனைசெய்யும் பத்திராதிபர்கள் இவ்வியக்கத்திற்கும், இவ்வியக்க கர்த்தர்களுக்கும் பகிரங்கமாக ஆதரவுகொடுக்க முன்வரவேண்டுமேயன்றி "தயவைச் சம்பாதிக்கவேண்டிய தத்துவம்" ஒன்றும் இதில் அடங்கியில்லை என்பதே எமதபிப்பிராயம். கள்ளமில்லா உள்ளத்துடனும், திரிகரண சுத்தியுடனும் பத்திராதிபர்கள் வெளியில் வரட்டும். உள்ளன்பிலாதார்—வஞ்சகர்—துரோகர்—அயோக்கியர் ஒதுங்கி வாழட்டும். அன்னவர்கள் தயவை சம்பாதிக்க அவசியமில்லை. அவர்களை பொருட்படுத்த நிமித்தமுமில்லை. ஆதரவு அளிக்காவிடினும் உபத்திரவம் இல்லை

[இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க]

# சென்னை மாகாண பார்ப்பனரல்லாதாரின் விசேஷ மகாநாடு.

1927-ம் வருஷம் ஜுலை மாதம் 2, 3தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருநெல்வேலிஜில்லா போர்டுதலைவரும் சட்டசபை அங்கத்தினருமான

திவான் பகதூர்

## S. குமாரசாமி ரெட்டியார், B. A. B. L.

அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கோயமுத்தூரில் நடைபெறும்

நமது மாகாணத்தில் உள்ள பார்ப்பனரல்லாதமக்களின் பொதுமுன்னேற்றத்தையுத்தேசித்தும் சிறப்பாக நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும் இதுசமயம் நமக்குள் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் உண்டாக்க வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. அதற்கு ஆகவே பெரிதும் இம்மகாநாடு கூட்டப்படுகிறது. ஆகலால் பார்ப்பனரல்லாத கனவான்கள் தங்களுக்குள் அரசியல்விஷயத்தில்எவ்வித அபிப்பிராய பேதமிருந்தாலும் அதற்குக் குந்தகமில்லாமல் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைப்பதற்கு அனுகூலமான ஒரு திட்டத்தைத்தயாரிக்கவும் அவரவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும் தயவு செய்து எல்லா பார்ப்பனரல்லாதகனவான்களும்விஜயம் செய்து மகாநாட்டை வெற்றி பெற நடப்பிவித்துக் கொடுக்க வேணுமாகவணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

P, இரத்தினசபாபதிக் கவுண்டர்,
வரவேற்புக் கமிட்டி தலைவர் கோயமுத்தூர்.

கோவை

## மகாநாட்டின் வசூல்.

| | |
|---|---|
| முன் வசூல் | 4369 |
| **ஈரோடு.** | |
| ஸ்ரீமான்கள் | |
| ஈ வெ ராமசாமி நாயக்கர் | 100 |
| கா அ ஷேக்தாவுத் சாயபு | 100 |
| மு ச அ முத்துக்கருப்பஞ் செட்டியார் | 50 |
| ப வெ நாராயணசாமி செட்டியார் அண்டு சன்ஸ் | 50 |
| மு சிக்கய்ய நாயக்கர் | 50 |
| ந மு ஷண்முகசுந்திர முதலியார் | 50 |
| த பச்சமுத்து செட்டியார் | 50 |
| அ கோவிந்த நாயக்கர | 25 |
| வி வெங்கிட்டராம நாயக்கர் | 25 |
| செ ந பழனிவேலப்ப கவுண்டர் | 25 |
| மி செ அ மைதீன்பாச்சா சாயபு | 15 |
| எம் ஏ ஆண்டமுத்துக்கவுண்டர் | 51 |
| என் எம் கந்தசாமி கவுண்டர் | 50 |
| கே எஸ் ரங்கய்ய கவுண்டர் | 20 |
| **தாராபுரம் தாலூகா** | |
| சிவன்மலை சுப்பிரமணிய முதலியார் | 2[illegible] |
| குள்ளம் பாளையம் சுப்பராய கவுண்டர் | 25 |
| கே. சுப்பராய கவுண்டர் | 25 |
| வி எம் கே சுப்பய்ய கவுண்டர் | 10 |
| மற்றும் இருகனவான்கள் | 40 |
| கே எஸ் சுபபிரமணிய கவுண்டர் | 50 |
| கணபதிபல்லவராயர் | 30 |
| வி நாராயணசாமி முதலியார் | 20 |
| சிவன்மலை கவுண்டர் | 25 |
| எஸ் பொன்னுசாமி கவுண்டர் | 15 |
| சீரங்க கவுண்டர் | 10 |
| என் மாரியப்ப தேவர் | 25 |
| எஸ் பெரியசாமி கவுண்டர் | 10 |
| சி எஸ் குப்ப கவுண்டர் | 5 |
| மைனர் சி கே சீரங்க கவுண்டர் | 10 |
| பி பழனியப்ப கவுண்டர் | 5 |
| கீரனூர் எம் பி சின்னசாமி கவுண்டர் | 5 |
| எஸ் முத்துக்கருப்ப கவுண்டர் | 15 |
| குமாரதேவர் | 15 |
| கே முத்துகிருஷ்ண நாயுடு | 15 |
| **பவானி.** | |
| கே எம் கே கூளையஞ் செட்டியார் | 15 |
| தாளபாளையம் ஆர் ஏ சுப்பரமணிய செட்டியார் | 10 |
| சி வீராசாமி நாயுடு | 15 |
| பி எல் கே பெருமாள்சாமி செட்டியார் | 25 |
| டி. எஸ் பி சுப்பரமணிய செட்டியார் | 10 |
| **சத்தியமங்கலம்** | |
| கே பி வெங்கிட்ராம செட்டியார் | 75 |
| எஸ் சிவசம்பு செட்டியார் | 25 |
| வி எஸ் கிருஷ்ண செட்டியார் ?! | 25 |
| எஸ் கே கிருஷ்ணசாமிக் கவுண்டர் | 25 |
| எஸ் குப்புநஞ்சய்ய செட்டியார் | 10 |
| வி எஸ் கிருஷ்ணசாமி பிள்ளை | 10 |
| ஆகக்கூடுதல் ரூபாய் | 5,655 |

## மன்னிக்க.

கோயம்புத்தூர் மகாநாட்டில் காங்கிரஸ் சம்பந்தமாக வரும் தீர்மானத்தைக்குறித்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன அவைகள் பெரும்பாலும் நாம் எழுதிய விஷயங்களை அனுசரித்திருப்பதோடு சில குறிப்பிட்ட நபர்களைத்தாக்கி எழுதி இருப்பதாலும் இந்த விஷயத்தில் மகாநாடு முடியும் வரை நாம் அதிகமாக எழுதாமல் கேழ்விகளுக்குச் சமாதானம் மாத்திரம் எழுதுவது என்கிற கொள்கையில் இருப்பதாலும் அவற்றை பிரசுரிக்காததற்கு மன்னிக்க வேண்டுகிறோம்.

# கோயம்புத்தூர் பிராமணரல்லாதார் மகாநாட்டிற்கு எல்லோரும் வாருங்கள்.

(கைவல்யசாமியார் எழுதுகிறார்)

முதல் முதல் இங்குதான் உங்கள் சபை கூட்டப்பட்டது. இப்பொழுது இங்குதான் உங்களுடைய முக்கிய விஷயம் தீர்மானப்படவேண்டும். இப்பொழுது உங்கள் சமூகத்திற்கும் உங்கள் தேசத்திற்கும் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தின் தடைகளை நீக்க அநேக பிரமுகர்கள் உங்கள் வரவைக் கோவையில் எதிர்பார்ப்பதற்குக் காரணம் தலைவர்கள் பிரயாசையும், வாலிபத் தொண்டர்களின் உழைப்பும் ஜனங்களின் உற்சாகமும், பழய பரம்பரையான கொங்குவேளாளத் தமிழர்களின் சந்தோஷமும் மட்டும் காரணமன்று. கோவை என்னும் பெயரே இத்தனைக்கும் பொருத்தமானது என்பதை கடவுளுமுணர்ந்தார். கோவை என்னும் பதம் ஒழுங்கு மாதர் கழுத்திலணியும் அணிவடம் புஷ்பங்களினாலோ இரத்தினங்களினாலோ கோர்த்தல் கோர்த்த மாலை என்னும் அர்த்தமும் படைவகுப்பு படை முனையணி என்னும் கருத்தோடு கூடின நிரை என்னும் அர்த்தத்தையுமுடையது. அதன் அர்த்தப் பிரகாரம் ஒரு கூட்டப்படையான நீங்கள் உங்கள் சங்கத்தின் தீர்மான ஒழுக்கங்களான இரத்தினங்களைக்கோர்த்து கோர்த்தமாலையாக்கி உங்கள் தமிழ்நாட்டுப் பூதேவியின் கழுத்தில் ஆபரணமாக அணியுங்கள் "கொடுக்க கொங்கு" என்னும் உதாரத்துவ கொங்கு நாடான கோயமுத்தூர் ஜில்லாவிற்கு எல்லாரும் வாருங்கள் கொங்கு கெட்டால் எங்கும் கெடும் 'என்னும்' ஞாயப்பிரகாரம் கோயமுத்தூர் ஜில்லாவில் உங்கள் காரியங்கள் தீர்மானமாகாவிட்டால் எங்குதான் உங்கள் நியாயம் தீர்மானமாவது. சோராஜ்ஜியத்தின் மழையால் மற்ற தமிழ் நாடுகள் எப்படிச் செழிப்பையடைகின்றனவோ அப்படி பேசோராஜ்ஜியத்தின் மகனான கொங்கு ராஜ்ஜியத்தில் முளைத்தெழுந்த 'குடியரசு' 'தமிழ்நாடு' 'நவசக்தி' பிரகாசமடையவேண்டும். இம்மூன்று பத்திராதிபருக்கும் காங்கிரஸில் சேருவதிலும் சேராதிருப்பதிலும் அபிப்பிராய வித்தியாசமிருக்கிறது. சொர்க்கத்திலும் அதற்குமேற்பட்ட கடவுள் சந்நிதானத்திலும் ஜீவன் சுவாதந்திரியத்துடன் இருக்கவேண்டுமென்று நினைக்கும் இவர்களின் தத்துவங்களில் வித்தியாசமில்லை. ஆராய்ச்சியில் இவர்கள் சொல்லும் அபிப்பிராயம் கேட்பவர்கட்கு தள்ளவும் முடியாமலிருக்கிறது. இந்த வழிகளை நிர்ணயம் பண்ணவேண்டியவர்கள் நீங்களே. ராஜ்ஜிய சுவந்திரமும் மதச் சீர்கேட்டின் திருத்தமும் உங்களுடைய பரிசுத்தமான எண்ணத்தின் உழைப்பின் சாமார்த்தியத்தினால் அடையக் கூடிய காரியமே ஒழிய அவை காங்கிரசிலுமில்லை ஜஸ்டிஸ்கட்சியிலுமில்லை. துக்கத்தைத் தவிர்க்க ஏற்படும் பக்தன் கோவிலில் கடவுளைக்காண்கிறான். சுகத்தை விரும்பும் யோகி தன் ஆசனத்தில் கடவுளைத்தெரிகிக்கிறான். இருவருக்கும் வைராக்கியமும் அதற்கு வேண்டிய நிர்ணயம் பிரயாசை எப்படி அவசியமோ அப்படியே காங்கிரசில் சேர்ந்தாலும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தாலும் இரண்டையும் அனுசரித்தாலும் அனுசரிக்கா விட்டாலும் கொள்கையில் நிலையும்தான் அடைய வேண்டியதில் இடைவிடா முயற்சியும் அதையடைய வேண்டியதற்கும் தைரியமுமான பெருமையும் அடையும் வரையிலும் சமயோசிதமான சலனமிலாபுத்தியும் தெளிந்த அறிவும் நம கூட்டத்திற்கும்தலைவருக்கும் வேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராயம் வித்தியாசப்படக்காரணமில்லை, ஒரு பூ, மாலையாகாது. ஒருமரம், தோப்பாகாது ஒரு கை ஓசைக்குதவாது. என்பது போல் மேற்சொன்ன குணங்களோடு கூடின ஒன்றிரண்டு மனிதர்களால் ஒரு காரியமும் ஆவதில்லை நம் கூட்டத்தில் இன்னும் சிலரேனும் மேற்சொன்ன குணத்தோடு கூடினவர்களாயிருக்கவேண்டும். அவையில்லாததினால் தான் நாளுக்கு நாள் நம் காரியம் கெட்டு கீழாவதன்னியில் பழிச்சொல்லிற்கும் ஆளாகிறோம் குற்றம் எல்லோருக்கும் தெரிகிறது அதைத் தீர்க்க அநேக நியாயங்களும் சொல்லப்படுகிறது. குற்றத்தை நீக்கும் பிரயாசையில் தன்னை நீக்கியே விவகரிப்பதோடு நமக்குள்ளே சில்லரைச்சண்டை அற்பப்பக அற்பப்பொறுமை இவைகளை பழிடு கொடுக்கிறோம்.

யுத்தத்திற்காக வாளைப் பெறுக் கொண்ட வீரன் சத்துருக்களிடம் வாளை உபயோகப்படுத்தாவிட்டால் தனக்குத்தான் எப்படி வாளை பிடுங்கிக் கொள்ளுவனோ அது போல் சமூகத்தை இரட்சிக்காத பணக்காரனின் பணத்தை கடவுள் பிடுங்கிக் கொள்ளுவாரென்பதை பணக்காரன் உணராமல் போனாலும் போகட்டும். பிராமணரல்லாதார் கட்சியினால் நன்மை யடைந்து அக்கட்சிக்கு ஒரு நன்மையும் செய்யாமலிருப்பதோடு துரோகம் செய்யும் சண்டாளர்கள் தலைநாலும் தலையட்டும். பாப்பானுக்கு பயந்து அவனால் பிழைக்க நினைக்துக் கொண்டு அவன் சொல்லும் பேச்சையே சொல்லி வழக்காடும் வாயாடிகள் மறைந்து கொண்டாலும்கொள்ளட்டும். ஆராச்சி சிறிது கூட இல்லாமல் பகுத்தறிவு நோக்கமு மற்று அனாவசியமான குற்றத்தையே குறிக்கும் வெட்டிப் பேச்சையே பேசி வேண்டுமென்றே குற்றத்தைக் கண்டு பிடிக்கும் குலக்கோடாலிகள் குட்டிச்சுவராகப் போனாலும் போகட்டும். தான் ஒரு காரியமும் செய்யாமல் செய்கிறவர்கட்கும் மனச்சோர் தலையுண்டுபண்ணி தன் காரியத்தையே ராப்பகலாகச்சிந்தித்து அது கெட்டுப்போவதை பார்த்தும பின்னும் அதையே செய்து கொண்டு அவன் பாடு யாருக்குமுதவாமல் செத்தாலும் சாகட்டும். ஏழையைமோசம் செய்து கூலியாளரின் கூலியைப் பிடித்து ஒரு உபகாரம்கூட யாருக்கும் செய்யாமலிருக்கும் பணக்காரப்பாவிகள் பாப்பானுக்கு கொடுத்து படுக்கையில்பார்க்க ஆளில்லாமல் அய்யோசிவனே என்று அலரிச் செத்தாலும் சாகட்டும். நம்மைப் பாழ்பண்ணப் பார்த்து இருக்கும் பார்ப்பானிடம்சேர்ந்து வயர் வளர்க்கவும் பெருமையடையவும் திரியும் நம் கூட்டத்தார்களில் சிலர் தெரிந்து தெரியாமல் அவர்கள் செய்யும் உபசாரத்தால் மெய்மறந்து ஏமாந்து செய்யும் பிரசாரம் மானங் கெட்டப் பிழைப்பென்பதை அவர்கள் உணரக்காலம் வந்தாலும் வராவிட்டாலும் இவர்களை எல்லாம் கவனிக்காமல் ராஜ்ஜிய அரசில் உத்தியோக வறுமை முதலியவைகளினால் பலமாகப் பீடிக்கப்பட்டிருக்கும் நம்மவர்களை கைதூக்கிவிட நீங்கள் எல்லாரும்வந்து சேருங்கள். பரிசுத்தமானவர்களாயும் அன்பு மிகுந்தவர்களாயும் உண்மை தைரிய சாலிகளாயும் இருப்பவர்கள் அநேகர் நம்பியிருக்கிறார்கள். அவர்களும் நீங்களும்ஒன்றாககூடிஆலோசித்து ஆஷாடபூதிவேஷம் போடுகிறவர்களை அடக்கி அந்தரங்கபித்தலாடம் செய்கிறவர்களின் ரகசியங்களைத் துலைத்து இரகஸ்சியப்புரட்டு செய்கிறவன் மனதைக்கொளுத்தி தேசப்பொருப்புகளை வகிக்கும் இயற்கை உரிமை இல்லாதிருப்பதைவிட மத இகழ்ச்சியின் துன்பங்கள் நம்நெஞ்சைத் தின்னுகின்றன என்பதை எல்லாருக்கும் சொல்லி உங்களுடையவும் எங்களுடையவும் நன்மைகளைக்காப்பாற்ற நீங்களெல்லாரும் வருவீர்களென்று உங்கள் உபசாரணைத் தலைவர்கொங்குவேளாளகுலக் கொழுந்தாம் இரத்தினசபாபதி தங்களனைவரையும் ஆசையோடெவரவேற்று உபசரிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார் வாருங்கள்.

---

திருமங்கலம்:—இவ்வூரில் பார்ப்பனர்கள் அதிக்கம் பலமாய் இருக்கிறதென்றும், இங்குள்ள பள்ளிக்கூடத்தில் பார்ப்பனரல்லாத பிள்ளைகட்குப் பார்ப்பன உபாத்தியாயர்கள் சரியானபடி கல்வி கற்பிப்பதில்லை என்றும், ஊரிலுள்ள ஹைஸ்கூலில் நாடார் பிள்ளைகள் சேர்த்துக்கொள்வதற்கு மறுக்கப்படுகிறார்களென்றும், பார்ப்பனத்தெருக்களில் சில வகுப்பாரை நடக்கக்கூடாதென்றும் கட்டாயப்படுத்துகிறார்களென்றும் 1500 பார்ப்பனரல்லாதாரிருந்தும் 500 பார்ப்பனர் உள்ள ஒரு யூனியனில் தமது குப்பை அழுக்குகளை எடுக்கப்படில் தாழ்ந்தவர்கள் தங்களிருப்பிடங்களுக்குள் நுழையலாம் படித்து முன்னேற நுழையக் கூடாதென்கிறார்கள் என்று ஸ்ரீமான் சுப்பையா எழுதுகிறார்.

தூத்துக்குடி மா. கிருஷ்ணசாமி பிள்ளை. பெண்பாடசாலை.— பிரபல வர்த்தக கம்பெனியான சி. சு- வ. கம்பெனியின் பங்காளியாய் இருந்த திருவாளர் (காலஞ் சென்ற) ம கிருஷ்ணம் பிள்ளை அவர்கள் ஞாபகார்த்தமாக அவர்கள் குடும்பத்தார் பெண்கல்வி அபிவிருத்திக்காக ரூ 10000 பெருமான நகைகளையும், ரூபாய் 25000 ரொக்கமும் சாஸ்வத நிதியாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்நோக்கத்திற்கிணங்க யேற்கனவே இவ்வூரில் நடைபெற்று வந்த அம்பலவாணர் பெண்பாடசாலையை, 29—4—27 முதலேற்றுக்கொண்டு கிருஷ்ண பிள்ளை பெண்பாடசாலை என்ற பெயரால் நடத்தி வருகிறார்கள் விரைவில் புது கட்டடம் ஒன்றும் கட்டப்படும் பெண் கல்வி அபிவிருத்தி இப்பகுதியில் செய்த பெரிய தர்மம் இதுவே யாகும் இப்பள்ளிக்கூடமும் இக்குடும்பத்தாரும் நீடூழி வாழ பிரார்த்திக்கிறோம் (ஒரு நிருபர்)

பட்டுக்கோட்டை:—இவ்வூர் சுயமரியாதைச் சங்க ஆதரவில் ஸ்ரீமான் வேணுகோபால்நாயுடு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூடிய மகாநாட்டில் திருவாளர்கள் அருணாசலனார் முதலியவர்கள் முறையே நமது முன்னேற்றம், எஸ். சீனிவாசய்யங்காரின் பாவமூட்டை பிரயாணம், என்பது பற்றி பேசினதோடு இச்சங்க ஆதரவில் தொழிலாளர் சங்கம் ஒன்றும், கதர் வஸ்திராலயம் ஒன்றும் முறையே திருவாளர்கள் கல்யாணசுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர் அவர்களால் திறப்புவிழா செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கெனசெல்வாக்குள்ள ஒரு காரியக்கமிட்டியும் திறக்கப்பட்டது என்று காரியதரிசி பி. மாணிக்கம் பிள்ளை எழுதுகிறார்.

# திராவிடர் கழகம் கோவிற்பட்டி

## 18-வது ஆண்டு நிறைவுவிழா

திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலைமை வகித்தார்.

கோவிற்பட்டி திராவிடர் கழகத்தின் 18-வது ஆண்டு திருவிழா 19-6-27ல் போர்டு ஹைஸ்கூல் கட்டிடத்தில் வெகு விமரிசையோடு நடக்கப் பெற்றது. வைக்கம் வீரர் உயர்திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் குடி அரசு பத்திராதிபர், தலைமை வகித்தனர். திருவாளர், சிதம்பரம் பிள்ளை வக்கீல் கோவில்பட்டி, எம் எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை போராசிரியர், புன்னைவன நாதமுதலியார். திருநெல்வேலி கிருஸ்தவ கல்லூரித்தலைமைத் தமிழ் ஆசிரியர், அ. சோமசுந்தரம் செட்டியார், காரைக்குடி, விருதை சிவஞான யோகிகள் முதலிய அறிஞர் பலர் வந்திருந்தனர், சொற்பொழிவு மேடை முழுவதும் அறிஞர், பிரபுக்கள், ஆடவர், மகளிர், யாவராலும் நிறைந்திருந்தது.

மாலை 3-30 ஆனதும் தமிழ் மறை பண்ணுடன் ஓதப்பட்டது. பின் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் பிரேரிக்கப்பட்டு, ஏ. எஸ். இராமசாமி செட்டியார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு யாவராலும் போற்றப்பட்ட கோரிக்கையின்படி உயர்திரு நாயக்கர் அவர்கள் தலைமை வகித்தனர். விருதை சிவஞான யோகி அவர்கள் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தனர்.

அன்பர்களே! திரு நாயக்கரின் முகவுரை.

நமது நண்பரும் அரசியல் தலைவருமான திருவாளர் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் என்னைப்பற்றி சொல்லியவைகள் யாவும் என்னிடம் உள்ள அன்பினலல்லாது அவ்வளவு உண்மை என்று தாங்கள் நம்பிவிடக்கூடாது என்று தங்களை கேட்டுக்கொள்ளுகிறேன். என்னை அவர் தலைவர் என்று சொன்னதற்கு ஆக நான் மிகுதியும் வெட்கப்படுகிறேன். அவர் வங்காளப் பிரிவினையின்போது தமிழ் நாட்டில்சிறப்பாக இந்த ஜில்லாவில் அரும்பெரும் தலைவராயிருந்து நடத்திய பெருங்களர்ச்சியின்போது நான் உல்லாசத்துடன் விடலைப் புருஷனாய் விளையாடிக்கொண்டிருந்தேன். அவரையும் அவர் போன்றோரையும் கண்டே பொதுத் தொண்டில் இறங்கினவன். அன்றியும் நான் சிவ ஞானயோகிகள் வாசித்துக்கொடுத்த உபசாரப்பத்திர வாக்கியங்களுக்கும் நான் ஒரு சிறிதும் பொருத்தமுடையவன் அல்லன் ஆகிலும் அப்பத்திரத்தில் எனது கொள்கைகளை புகழ்ந்திருக்கும் விஷயங்களைப் பொருந்தவரை அக்கொள்கைக்கு அதை ஒரு நற்சாக்ஷிய பத்திரமாக எடுத்துக்கொண்டு அதற்கு ஆக எனது நன்றியைச் செலுத்துகின்றேன்.

இத்திராவிட சங்கம் 18-வது ஆண்டு விழா என்று சொல்லப்படுவதால் இதற்கு 18 ஆண்டு முடிந்திருக்கிறது. நமது நாட்டில் திராவிடர் முன்னேற்ற சம்மந்தமாய் ஏதாவது இயக்கங்கள் மூலம் பேசுவதாயிருந்தால் நமது எதிரிகள் உத்தியோகத்திற்காசைப்பட்ட யாரோசில பார்ப்பனரல்லாதாரால் சமீபத்தில் திராவிடர்கள் பெயரைச்சொல்லிக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு சுயநல இயக்கம் என்று சொல்லிவருவது உங்களுக்குத் தெரியும். ஆனால் இக்கழகம் அப்பேர்ப்பட்டவர்களால் ஆக்கப்பட்டதா என்பதும்சுவாமி சிவஞான யோகிகள் ஏதாவது உத்தியோகம் ஆக்கப்பட்டு கிடைக்காமல் போனதற்கு ஆக ஆரம்பித்தாரா என்பதையும் அவருக்கு ஏதாவது உத்தியோகம் வேண்டியிருக்கிறதா என்பதையும் திருவள்ளுவருக்கு உத்தியோகம் வேண்டியிருந்ததா புசகருக்கு உத்தியோகம் வேண்டியிருந்ததா கபிலருக்கு உத்தியோகம் வேண்டியிருந்ததா அவ்வைக்கு உத்தியோகம் வேண்டியிருந்ததா என்பதையும் யோசித்துப்பாருங்கள் அன்றியும் சுவாமி சிவஞான யோகிகள் காலத்தில் மாத்திரம் இம்மாதிரி முயற்சிகள் தோன்றிற்று என்பதாக நினைக்கிறீர்களா? என்று. இந்த நாட்டில் ஆரியர்கள் கால் வைத்தார்களோ அன்று முதலே ஆரியர் திராவிடர் என்கிற வேற்றுமையும் ஆரியர் சங்கம் திராவிடர் சங்கம் என்கிற இயக்கங்களும் சுயமரியாதை கிளர்ச்சிகளும் நாட்டில் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இதுகளை எவ்வளவோ பாடுபட்டு நமது எதிரிகள் மறைக்க முயன்றும் இயற்கைத்தத்துவம் மறைக்க முடியாமல் செய்துவருகிறது. எதுவரையில் ஆரியர் வேதம் என்பது நமது நாட்டில் இருக்குமோ எதுவரை ஆரியரா ஆதிக்கம் ஆரியதர்ம பிரசாரசபை வருணாசிரம தர்ம பிரசாரசபை நமது நாட்டில் இருக்குமோ அதுவரை நமது இயக்கம் அதாவது திராவிடர் முன்னேற்ற இயக்கம் சுயமரியாதை இயக்கம் சமரச இயக்கம் இருந்துதீர வேண்டியதுதான். சமீப காலத்தில் ஆரியர்களால் தஞ்சை ஜில்லா [illegible] என்கிற கிராமத்தில் கூட்டப்பட்ட "பிராமண சம்மேளனம்" என்னும் கூட்டத்தையும் அதன் நடவடிக்கைகளையும் பார்த்தவர்களுக்கு இம்மாதிரி இருக்கப்பட்ட சங்கங்கள் அவசியமா இல்லையா என்பது யாவருக்கும் தெரிந்திருக்கும். மேலும் நமது நாட்டில் மதம் அடங்கிய வேதம் சாஸ்திரம் ஸ்மிருதி ஆகமம் புராணம் முதலியவைகளின் பேரால் ஆரிய பிரசாரம் செய்துவரும் வரையில் நாம் இம்மாதிரி முயற்சிகளில் ஈடுபட்டு இருந்துதீரவேண்டியதுதான். எனவே இம் முயற்சிகள் வெற்றிபெற வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் எனது முகவுரையை நிறுத்திவிட்டு மற்றும் நான் ஏதாவது சொல்லிக்கொள்ளவேண்டிய விஷயங்கள் ஏற்பட்டால் அவற்றை எனது முடிவுரையில் சொல்லிக்கொள்ளுகிறேன் என்பதாக முகவுரை சொல்லி முடித்த உடன்

பின் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் "நம்மவர் கடமை" என்ற தம் சொற்பொழிவை நிகழ்த்தினர்..

பிள்ளையவர்கள் சொற்பொழிவு முடிந்தபின் திருநெலவேலி செயிண்டு ஜான்ஸ் கிறிஸ்தவ கல்லூரித்தலைமை ஆசிரியர் திருவாளர் புன்னைவன நாத முதலியார் அவர்கள்

சான்றோர் என்பது பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர் அவர் சான்றோர் என்கிற வார்த்தையை விரித்து அவ்வார்த்தை குறள் முதலிய நீதி நூல்களில் எப்படி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் காட்டி சான்றோர் தன்மையை விளக்கக் காட்டினர். பின்பு முன்னீர்பள்ளம் ஸ்ரீமான் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை எம். ஏ எல். டி. அவாகள் "தோல்காப்பியமும் பழந்தமிழரும்" என்னும் விஷயம் பற்றி ஒருவிரிவுரை நிகழ்த்தினர். அதில் தமிழின் காலம் உலகத்திலுள்ள எல்லா பாஷைகட்கும் முற்பட்டது என்பதற்கு ஆதாரம் காட்டியும் பழந்தமிழின் மேன்மை இன்னது என்றும் தமிழகத்திலாவது தொல்காப்பியத்திலாவது ஜாதி பிரிவுகள் இல்லை என்றும் தொல்காப்பியத்தில் அடிமை இல்லை என்றும் அக்காலத்தில் பார்ப்பனர் என்பதாக ஒரு பிரிவு மாத்திரம் காணப்படுவதாயும் அப்பார்ப்பனர் என்பவர்களும் தமிழ் மக்களுக்கு வேண்டிய பன்னிரு இயல்புகளில் பார்பனர் ஒரு இயல் என்னும் அவரது கடமை காமமிலே உரைத்தலாகும் என்றும தொல்காப்பிய காலத்தில் கடவுளுக்கு கண்மூக்கு முதலியவைகள் இல்லையென்றும் அவைகள் எல்லாம் இருப்பதற்கு காரணம் ஆரியர்கள் என்றும் அதன் பிறகேதான் தமிழகத்தின் ஒழுக்கம்குன்றி தமிழ்மக்கள் இகழப்பட்டார்கள் என்றும் தக்க ஆதாரங்களுடனும் மேற்கோள்களுடனும் பேசினர். பிறகு "தலைவர் ஸ்ரீ ராமசாமி நாயக்கர் முடிவுரை"யாக 2-மணி நேரம் பேசினர் அதன் சாரமாவது.

## தலைவரின் முடிவுரை

பிள்ளையவர்கள் சொற்பொழிவு முடிந்ததும் சிறிதுநேரம் இளைப்பாற விடப்பட்டது. பின் சபை மறுபடியும் நிறைந்தது. கடைசி விஷயம் தலைவரது உபந்நியாசம். அதைக் கேட்க சபையோர் யாவரும் ஆவலாய் நின்றனர் புதிதாயும் அநேகர் வந்துநிறைந்தனர் உயர் திரு வைக்கவீரரும் எழுந்தனர் 7 மணிமுதல் 9-30 மணி முடிய சிறிதும் நில்லாது "சமயமும் சடங்குகளும்" என்ற விஷயத்தைப் பற்றி பெருஞ்சொற்பொழிந்தனர். 9-மணி ஆயிற்று என்று கடிகாரத்தில் கண்டு தம் சொற்பொழிவைச் சுருக்கி முடித்தார். அப்போது தான் அவையோர் மணி ஆனதை உணர்ந்தனர். அதுவரை அவர் சொல்லும் ஒவ்வொர்வார்த்தையையும் உற்றுக் கேட்டனர். அவர் சொன்னதின் சாராம்சம்.

சகோதரர்களே!

தேசத்தின் பேரால் முன் தொண்டு செய்ய வந்த நான் இப்போது சமயத்தின் பேராலும் சடங்குகள் பேராலும் தொண்டு செய்யவந்ததைப் பார்க்க உங்களில் சிலருக்கு ஆச்சரியம் வரலாம் ஆனால் உண்மையில் இது ஆச்சரியப்படத்தக்கதல்ல முன்னமேயுள்ள என் கொள்கைகளும் இப்போதுள்ள என் கொள்கைகளும் ஒன்றேதான். இரண்டும நம் மக்களை அடிமைத்தனங்களிலிருந்து விடுவிக்க வேண்டிய விடுதலை தான். நம் மக்களுடைய சுதந்தரத்திற்கும் சுயமரியாதைக்கும் இடையூறாயிருப்பது சர்க்கார் மாத்திரமல்லாமல் நம் சமயமும் சடங்குகளுமாம். தேசத்திற்கு ஒத்தில்லாத ராஜியத்தில் கஷ்டப்பட்டு இவ்வளவு காலம் அடிமையாயிருந்த நாடு. நம் நாட்டைப் போல் வேறெந்த நாடும் இல்லை. காரணம் குருட்டு நம்பிக்கை. மூட பக்தி, சுய மரியாதையற்ற நிலைமை இவைகளால் நிறைந்து நம் சமயம்போல் அடிமைப்படுத்திருக்கும் சமயமும் வேறு எதுவுமில்லை. முன் ஒரு காலத்தில் கிறிஸ்துமதமும் இந்த அடிமைத்தனத்தில் அகப்படிருந்தது. குருக்கள் பாவமன்னிப்பு சீட்டுகள் விற்று ஜன சமூகத்தை அடிமைகளாக்கி வந்தனர். ஆனால் சீக்கிரம் சீர்திருத்தக்காரர்கள் ஏற்பட்டு தங்களுக்கு செய்த கொடுமைகட்கும் பயப்படாமல் இம்மூடக் கொள்கைகளை உடைத்தனர். ஜனசமூகம் விடுதலை அடைந்தது. நாடு மேம்பட்டது அது பற்றி இப்போதுள்ள கிறிஸ்துவநாடுகளின் பெருமை இந்த சீர்திருத்தக் காரர்களுக்கே சேரும.

இனி நம்முடைய சமயத்தில் எடுத்துக் கொள்வோம். மற்ற சமயங்களின் ஆதாரமான கொரான், பைபிள் முதலிய புஸ்தகங்களையெல்லாரும்படிக்கலாம், நம்முடைய சமய ஆதாரமா வேதங்களையோ ஒரு வகுப்பார் தவிர மற்றவர் படிக்கக் கூடாது கேட்கக்கூடாது படித்தால் நாக்கை அறுக்கவேண்டும். கேட்டால் காதில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்றவேண்டும், என் அய்யா இப்படிச் செய்பல மா என்று கேட்டால் அது மதத்துவேஷம் ஜாதித்துவேஷம், ஆகி விடுகிறது.

கடவுள் வழிபாடோ தரகர் இல்லாமல் செய்ய முடியாது. நம சாமிக்குப் பக்கத்தில்நாம்போனால் சாமி செத்து போவார். சில வகுப்பார் 10 முழத்தில் சில வகுப்பார் 100 முழத்தில் நிற்க வேண்டும் சில வகுப்பார்கண்களுக்கே தென்படக்




குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ ஆனி 12உ


## கோவை மகாநாடும் பார்ப்பனரல்லாதார் கடமையும்.

கோவையில் அடுத்தவாரம் கூடப்போகும் பார்ப்பனரல்லாதார் விசேஷ மகாநாட்டைப்பற்றி இதுவரை குடி அரசு 4, 5 தலையங்கம் எழுதி ஆகிவிட்டது. மாயவரம் மகாநாடு நடந்தது முதல் விசேஷமாய் கோவை மகாநாட்டைப்பற்றியே எங்கும் பேச்சாய் இருக்கிறது. இம்மகாநாட்டில் தமிழ் நாட்டுக்கு ஒரு புது உணர்ச்சி ஏற்படக்கூடும் என்பது நமது அபிப்பிராயம் ஆன போதிலும் இம்மகாநாடு சம்பந்தமாய் தலைவர்கள என்போருக்கு பெருத்த பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் யாரும் மறந்து விடக்கூடாது. ஏனெனில் பொது மக்களின் கவனத்தை இம்மகாநாடு வெகுவும் இழுத்துக்கொண்டிருப்பதுடன் இம்மகாநாட்டின் முடிவை பார்ப்பனரல்லாதார் மாத்திரம் அல்லாமல் பார்ப்பனரும் சர்க்காரும் வெகு ஆவலாய் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மகாநாட்டில் ஒரு கட்டுப்பாடானதும் எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடியதுமான ஒரு திட்டத்தை ஏற்படுத்த முடியவில்லையானால் பிறகு பார்ப்பனரல்லாதார் அரசியலிலும் சமூக இயலிலும் முன்னேறுங் காலம் சமீபத்தில் இல்லையென்றே தீர்மானித்து விட வேண்டியதுதான்.

பார்ப்பனரல்லாத சமூகப் பிரமுகர்கள் என்போர் இவ்விஷயமாய் இனி புதிதாகக் கற்றுக்கொள்ளவேண்டியதோ திருத்துப்பாடு அடையவேண்டியதோ அல்லது இனி ஒருவர் மனதைத்திருப்பக்கூடியதோ ஒன்று இருப்பதாக நாம் நினைப்பதற்கில்லை. ஏனெனில் இவ்வியக்கம் ஏற்பட்டு பத்து வருஷத்திற்கு மேலாகியும் இதன் குணதோஷங்களை இயக்கத்தில் கலந்திருந்தும் இயக்கத்திற்கு வெளியில் இருந்து கொண்டு எதிர்த்து நின்றும், சிலர் உள்ளிருந்து வெளிவந்தும், மறுபடியும் உட்புகுந்தும், வெளியிலிருந்து எதிர்த்தவர்கள் இப்போது உட்புகுந்து ஆதரித்தும், உள்ளிருந்து ஆதரித்தவர் இப்போது வெளியேறி எதிர்த்தும், ஆகிய பலவித அனுபவங்களை அநேகமாய் பெற்றாகி விட்டது. மேற்கண்ட இவ்வித நடவடிக்கைகளின் தன்மைகளையும் இவ்வித நடவடிக்கைகளின் காரண காரியங்களையும் யாவரும் தெரிந்து கொண்டும் ஆகிவிட்டது. அதோடுகூட கொள்கைகள் எவ்வளவு தூரம் ஒத்துக்கொள்ள முடியவில்லை என்பதும் அவரவர் சவுகரியங்கள் எவ்வளவு தூரம் இவ்வித காரியங்களுக்கு காரணமாய் இருந்தது இருக்கிறது இருக்கப்போகிறது என்பதும், ஏறக்குறைய எல்லோருக்கும் தெரியக்கூடியதாகி விட்டது.

ஆகையால் இனி வேண்டியதெல்லாம் அவரவர்கள் இஷ்டமும், சகிப்புத்தன்மையுமே அல்லாமல் மற்றபடி வேறு பெரிய மாறுதல்கள் ஏதும் தேவையிருப்பதாக நமக்குத்தெரியவில்லை. எனவே மகாநாட்டிற்கு வருவோர்களின் கடமை எல்லாம் எவ்வெவ் விஷயங்களில் கொள்கை மாறுபாடில்லையோ அவ்வவ்விஷயங்களில் தாராளமாய் மிகுதிவைத்துக்கொள்ளாமல் ஒன்றுபடக்கலா ஒத்துப்போகவேண்டும் என்பதும், கொள்கை மாறுதலும் நம்பிக்கை இன்மையும் ஏற்பட்ட விஷயங்களில் சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்பதுதான் இந்த இரண்டுகுணமும் மகாநாட்டிற்கு வரும் கனவான்களிடம் குடிகொண்டிருக்கும் பட்சத்தில் மகாநாட்டில் அபிப்பிராய பேதம் என்பதே காணமுடியாது. ஒரு கூட்டம் என்றாலே பலதிறப்பட்ட அபிப்பிராயமுடையவர்களைக் கொண்டதாகத்தான் இருக்கும். கண்ணியமான கூட்டம் என்பது பலதிறப்பட்ட அபிப்பிராயமுடையவர்கள் வந்தாலும் அவரவர்கள் அபிப்பிராயத்தை மதித்து நமது அபிப்பிராயம் ஒருவருக்குப் பிடிக்காவிட்டால் அவரை எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ அதுபோலத்தான் பிறர் அபிப்பிராயம் நமக்குப்பிடிக்காவிட்டால் நாமும் நடந்துகொள்ளவேண்டும். அன்றியும் ஒருவர் அபிப்பிராயத்தில் நமக்கு சந்தேகம் தோன்றுமானால் அதாவது "இது அவரின் கண்ணியமான அபிப்பிராயமல்ல, தங்களது "சுயநலத்திற்"கான அபிப்பிராயம் என்பதாக யாரிடமாவது நமக்குச் சந்தேகம் தோன்றுமானால் அவற்றையும் மரியாதையுடன் பொறுத்துக்கொண்டு சந்தேகத்தின் பிரயோஜனத்தை அவருக்கே கொடுத்து கண்ணியப்படுத்த வேண்டுமே அல்லாமல் அதை நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது எனென்றால் "உங்களுக்குத்தோன்றியதைச் சொல்லுங்கள்" என்பதாக நாமாக அழைத்து ஒருவர் வந்து இருக்கும்போது அவர் சொல்லுவதை பொறுமையுடன் கேழ்க்கவேண்டியது தான். மற்றபடி ஒருவர் அவ்வாறு கவந்து நமக்குச் சொல்லும்போது அதைத் தட்டி நமது மனதில் தோன்றியதைச் சொல்ல நமக்கு உரிமை வைத்துக்கொள்ளுவதில் குற்றமில்லை.

நாமாக வருந்தி அழைத்து குற்றம் சொல்லுவதானது பெருந்தன்மையான புத்தியாகாது. இதைப்பற்றி ஏன் இவ்வளவுதூரம் எழுதுகிறோம் என்றால் நமக்கு வந்துள்ள கடிதங்களும் நிருபங்களும் பெரிதும் இம்மாதிரி பொறுமையற்ற தன்மையை உடையதுகளாகவே இருக்கிறது. அன்றியும் இவ்வாரம் "நவசக்தி" தலையங்க முடிவில் "கோவை மகாநாட்டிற்கு போதருமாறு ஜஸ்டிஸ் கட்சியிற் சேர்ந்த பல பார்ப்பனரல்லாத தலைவர்கள் அழைக்கப்படுவார்கள் என்று நாம் அறிகிறோம். ஒருவேளை அவர்களும் மேடை மீது வாதப் போரில் தலையிட நேரலாம் அது போழ்து அமைதி பெருந்தகைமை முதலிய பாதுகாக்கப் படல் வேண்டுமென்று நாம் சொல்லவேண்டுவதில்லை. அழைக்கப்படுவோர் மரியாதையாக நடத்தப்படுவரென எதிர்பார்க்கிறோம்".

என்பதாக எழுதியிருக்கிறது. இவ்விஷயங்களைப் பார்த்தாலும் நமது எதிரிகள் பலர் இம்மகாநாட்டில் எப்படியாவது கலவரமுண்டாக்கி நமது கட்டைக்கலைக்க காத்திருப்பது அதிசயமல்லவானாலுமே இவ்வளவுதூரம் எழுதுகிறோம்.

நிற்க, இவ்வார நவசக்தி தலையங்கத்தில் கோவை மகாநாட்டைப்பற்றி எழுதியிருப்பதில் நம்மைப்பற்றி சில வார்த்தைகள் பொரிந்திருக்கிறது. அவற்றை மாத்திரம் இங்கெடுத்து எழுதி நமது கருத்தை வெளியிடுவோம். நவசக்தி எழுதியிருப்பது போலவே நாமும் வாதப்போருக்கு ஆக இதை எழுதவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நவசக்தியில் காணும் செய்தியாவது,

(1) "ஸ்ரீமான் நாயக்கரும் அவருள்ளிட்டாரும் ஜஸ்டிஸ் கக்ஷி காங்கிரசுடன் ஒன்றலாகாது என்று தம்மதம் நிறுவியே தீர்வர்."

"ஸ்ரீமான் நாயக்கரும் அவர் கூட்டத்தாரும விட்டுக்கொடுத்தாலன்றி ஜஸ்டிஸ் கக்ஷிதலைவர்களின் கருத்து நிறைவேறல் அரிது" என்றும்,

(2) "ஜஸ்டிஸ் கக்ஷியார் அரசியல்கூறு காங்கிரசோடு ஒன்றிவிடின் ஸ்ரீமான் நாயக்கர் தனது சமூகச் சீர் திருத்தத் தொண்டை இன்னும் பதின்மடங்கு ஊக்கமாக நிகழ்த்தலாம்." என்றும்,

(3) ஜஸ்டிஸ் கட்சியில் தனிப்பட்ட அரசியல் ஜீவநாடி ஒடுங்கலன்றி சமூகச்சீர்திருத்தத் தொண்டை திரம்பட ஆற்ற இயலாது அதற்கு இடமும நேராது என்று நாயக்கர் சொல்லுகிறார். இக்கூற்றில் ஒருவித உண்மை உண்டு என்பதை நாம் மறுக்க இல்லை." என்றும்-

(4) ஜஸ்டிஸ் கக்ஷியார் அரசியல் கூறு தேசிய வளர்ச்சிக்கு தடையாயிருப்பது ஈண்டு பெரிதும் கவனிக்கப்பாலது" என்றும்,

(5) "ஆதலால் நாயக்கர் விட்டுக்கொடுக்கும் போறத்தை கடைப்பிடித்தல் வேண்டுமென்று நாம் கூறுகிறோம்." என்றும் எழுதியிருக்கிறது.

நவசக்தி 22-6-27 தேதி தலையங்கத்தில் இவற்றையே முக்கியமாய்க் கருதி இவற்றிற்கு நமது கருத்தை வெளியிடக் கடமைப் பட்டுள்ளோம்.

1. நாம் நமது அபிப்பிராயத்தை வலியுறுத்தப்போவதில்லை. விஷயத்தை விளக்கிவிட்டு அவரவர்கள் மனச்சாட்சியின்படி நட

க்கவிட்டு விடுவோமே அல்லாமல் ஒருசிறிதும் கட்டாயப் படுத்தவோ ஓட்டுசேகரிக்கவோ மாட்டோமென்பதை உறுதிகூறுகிறோம். விட்டுக்கொடுத்தலைப்பற்றி மற்றொரு இடத்திலும் வருவதால் கடைசியாக எழுதுவோம்.

2. இரண்டாவது விஷயத்திற்கு நவசக்தியின் மூன்றாவது விஷயமே பதில் சொல்லிவிட்டபடியால் நாம் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை ஆனாலும் சிறிது சொல்லுவோம். பார்ப்பன பிரசாரம் நமது நாட்டில் பலப்பட்டிருப்பதற்கு காரணம் இது சமயம் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாயிருக்கும் அரசியல் ஜீவ நாடியின் வலுவு அல்லவா? அது போலவே ஜஸ்டிஸ் கட்சிக்கும் ஒரு ஸ்திரமாவது தனி அரசியல் ஜீவ நாடி இல்லாதிருக்குமானால் இது சமயம் "நமது நிலை என்னவாயிருக்கும் என்பதை மனதில் வைத்து பார்த்தால் விளங்காமல் போகாது.

ஜஸ்டிஸ் கட்சிக்கு தனி அரசியல் கொள்கை இல்லாதிருக்குமானால் ஜனாப் மகமது உஸ்மான் நிர்வாக சபை மெம்பராய் இருக்க முடியுமா? ஜனாப் மகமது உஸ்மானும் ஸ்ரீமான் மார்ஷ பேத்ரும் நிர்வாக சபை மெம்பராயில்லாதிருந்திருக்குமானால் ஸ்ரீமான்கள் கல்யாண சுந்தர முதலியாரும் வரதராஜுலு நாயுடுகாரும் ராமசாமி நாயக்கரும் ஜெயிலுக்கு வெளியில இருந்து கொண்டு தொழிலாளர்பிரசாரமோ தேசியப்பிரசாரமோ சமூக சீர்திருத்தப் பிரசாரமோ செய்ய முடியுமா என்று பந்தயம்கட்டி கேட்கிறோம். இந்த ரகசியம் அனேகருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஸ்ரீமான்கள் முதலியாருக்கும் நாயுடுவுக்கும் நாயக்கருக்கும் தெரியாமலிருக்க நியாயமில்லை. எந்த பிரசாரத்தையாவது அடக்க பார்ப்பன அரசியல் திட்டத்திற்கு சக்தி இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா? இந்த இரகசியங்களை அறிந்தேதான் நவசக்தி "நாயக்கர்சொல்வதில் ஒரு வித உண்மைஉண்டு" என்பதாக தானே ஒப்புக் கொண்டிருப்பதால் இதைப்பற்றி நாம் அதிகம் வளர்த்தவில்லை.

4-வது விஷயம் "ஜஸ்டிஸ்கக்ஷியின் அரசியல்கூறு தேசியவளர்ச்சிக்கு இடையூறு" என்பது.

இந்த இடத்தில்தான் நாம் நவ சக்தி இடமும் மற்றும்பலரிடத்திலும் பலமான அபிப்பிராய பேதம் கொள்ளுவதாயிருக்கிறது.

நவசக்தியைப்போலவே பாமரமக்களில் அனேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நாம் பலமுறை எழுதியிருக்கிறோம் இதுவரையாரும் அதுகளுக்குசமாதானம் எழுதவேஇல்லை. ஜஸ்டிஸ்கக்ஷி அரசியல்கூறு என்ன என்பது தெரிந்தால் இந்த பிரசினை பிறக்கவே இடமிருக்காது,

"தேசிய" அரசியல் கூறால்தேசம் கஷ்டப்படுவதும்இன்றையதேசிய சபை நாடு சிறிப்பதும் அறியாதார்யார்? இதைஎல்லோரையும் விடநவசக்தி அதிகம் அறிந்திருக்கிறது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில்நவசக்தியின் கண்டனங்களை நாம் கவனித்து வாசித்துவந்திருக்கிறோம். எனினும் கீழே சிலவிஷயங்களைபாமரமக்களுக்கு ஆக எழுதுகிறோம்.

தேசியக் கொள்கைகளுக்கு நமது நாட்டில் செல்வாக்கு ஏற்பட்டதே சமூகசீர்திருத்தக் கொள்கைகளால் மகாத்மாவின் நிர்மாண திட்டமும் நியாயமான தேசிய திட்டமாகிய ஒத்துழையாமையும் காங்கிரஸில் இருக்கிறது என்றதினாலல்லாமல் வேறு காரணமுண்டா? ஸ்ரீமான்கள் முதலியாரும் நாயுடுவும் இன்னும் சிலரும் மதிக்கும் காங்கிரஸில் இத்திட்டங்கள் இருக்கிறதா? இருக்கவைக்க முடியுமா? மகாத்மாவுக்கு மேல் இனியாராவது முயற்சிக்க முடியுமா? முடியுமானால் அப்போது அதில் நாம் போய்சேர்ந்து தொண்டாற்ற முடியாதா? காங்கிரஸ் முன்னால் ஒத்துழையாமையிருந்தது என்பதையும் ஒப்புக்கொண்டு பழய படி இப்போதும் ஒத்துழைப்புக்கு வந்துவிட்டது என்பதையும் ஒப்புக்கொண்ட ஒருவர் ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் கூறு தேசிய வளர்ச்சிக்கு இடையூறாயிருக்கிறது என்று சொல்லுவதானால் நாம் அதற்கு என்னபதில் சொல்லமுடியும். தேசியதிட்டத்தில் முதலாவதாக ஒத்துழையாமை நிறுத்தப்பட்டுவிட்டது. பிரதமதுவிலக்கு நிறுத்தப்பட்டது பிறகு தீண்டாமை நிறுத்தப்பட்டது இப்போது கதரும் நீக்கப்பட மகாத்மாவின் சம்மதம் பெற்றுவிட்டது. ஒத்துழைப்பு திட்டங்களையும் ஒப்புக்கொண்டு சட்டசபைக்கும் போய் இரட்டை ஆட்சிக்கும் ஆசிகூறி ஆக்கமளித்து வருவதையும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டாய் விட்டது. இனி என்ன செய்வது பாக்கி இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சியோ மகாத்மாவின் நிர்மாணத்திட்டத்தை ஒப்புக்கொண்டாய் விட்டது. அரசியலில் "முட்டுக்கட்டையைக்" கைக்கொண்டிருக்கிறது இப்படி இருக்க எந்த விதத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் திட்டத்தில்-அரசியல் கூறில் காங்கிரசுக்கு பிற்பட்டதாயிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

ஒரு சமயம் "நாளைதினம் மாறி விடுமோ என்னமோ" என்றுபயப்படுவதானாலோ யார் மாறாதவர்களாயிருந்தார்கள்? எந்த அரசியல் சமூகஇயல்இயக்கங்களின்திட்டம்மாறாததா இருந்தது? எந்த தலைவர் மாறாதவராயிருக்கிறார். ஸ்ரீமான்பண்டித மாளவிய மேடைமீது ஏறிகொண்டு தீண்டாதவர்களுக்காக கண்ணீர் விட்டு மக்களை ஏமாற்றுகிறார். தனது குடும்பத்தில்தன்மகனுக்கு பெண்கொடுத்த சம்மந்திஒருவர் வேறு வகைஒரு பார்ப்பானுக்கு பெண் கொடுத்ததற்காகவும் மற்றொரு வகை பார்ப்பான் பந்தியில்உட்கார்ந்து சாப்பிட்டதற்காகவும அவரை ஜாதியை விட்டுத் தள்ளி விட்டதோடு தனது மருமகளின் தாயார்சாகக் கிடக்கும்போது மருமகள் எவ்வளவு கெஞ்சி அழுதும் தனது தாயாரைப்பார்க்க அனுப்பிக்கொடுக்காத புண்ணியஆத்மா இன்றையதினம் தென்னாட்டில் வந்து காசிபார்ப்பனப் பள்ளிக்கூடத்திற்கு பணம் பறிக்க பிராமண பிராமணரல்லாதார் ஒற்றுமைப் பிரசாரம் செய்கிறார்.

இந்து முஸ்லீம ஒற்றுமைக்காக 21 நாள் பட்டினி இருந்த மகாத்மா காந்தி "இந்து முஸ்லீம கலவரம் இப்படி 'இருக்கும்போது எனக்கு ஓய்வு வேறு வேண்டுமா" என்று சொன்ன மகாத்மாகாந்தி இன்றைய தினம் "அவரவர்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள அவரவர்கள் கையாலானதைத் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு ஓய்விலிருக்கிறார். இப்படியே இனியும் பல உதாரணங்கள் கூறலாம். எனவே "எந்த இயக்கத்தை நம்புவது? யார் பேச்சையும் நடவடிக்கையும் நம்புவது? யார் அபிப்பிராயம் மாற்றிக்கொள்ள முடியாதது? என்று சொல்லுவது" என்பதையோசித்துப்பார்த்தால் இம்மாதிரி சந்தேகத்திற்கு இடமிருக்காது. "மனமுண்டானால் வழி உண்டு" என்கிற சமாதானம் தான் சொல்லி ஆகவேண்டும் இனி "நாயக்கர் விட்டுக்கொடுக்கும் பொறுத்தமை கைக்கொள் வேண்டும்" என்று சொல்வதற்கு நாம பதில் சொல்லியாக வேண்டும். இவ்விஷயத்தில் விட்டுக்கொடுப்பது என்பதின் அர்த்தம் கொள்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதுதான், கொள்கைகளை மாற்றிக்கொள்ளுவது என்பது மதத்தை விட்டுமாறு என்று கட்டாயப்படுத்துவதற்கொப்பானது. ஒரு மகமதியனை நீ விக்கிரகத்தை வணங்கு என்று சொல்லுவது எப்படி அநியாயமோ அதுபோல் ஒருவனை காங்கிரசில் சேரு என்று சொல்வது என்பது நமது அபிப்பிராயம். இன்னம் யோசித்துப்பார்த்தால் அதைவிட கடினமான கட்டளை என்று கூட சொல்லலாம் — விக்ரஹத்தை வணங்குவது பாவம் என்பது ஒரு மதஸ்தருடைய நம்பிக்கையே ஒழிய அது பிரத்தியட்சமல்ல; ஆனால் காங்கிரஸ் தேசத்திற்கு கெடுதியானது என்பது பிரத்தியட்ச பிரமாணத்தால் ஏற்பட்ட அனுபவ முடிவு. அதை மாற்றிக்கொள்வது என்பது உண்மையுள்ளவனுக்கு சாத்தியப்படக் கூடியது அல்ல என்பது நமது அபிப்பிராயம். உண்மையில் பலன் தரத்தக்க மகாத்மாவின் அரசியல் திட்டங்களை பாழாக்கினதும், அதில் ஈடுபட்டவர்களில் பெரும் பாலோரின் கண்ணியத்தை கொள்ளைகொண்டதும்,

இந்த விதமான விட்டுக்கொடுக்கும் தன்மையும் இதை அநுசரித்த "ஒற்றுமை"ப் பிசாசும் தானே அல்லாமல் வேறல்ல. மகாத்மா காந்தி தனது கொள்கையில் இருந்து ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காமலிருந்தவரை தேசத்தின் நிலைகொள்கையின் தத்துவத்தின் தன்மை தேசிய அனுகூலம் அரசாங்கத்தின் மனம் எப்படி இருந்தது? விட்டுக்கொடுத்து ஒற்றுமைப்பிசாசுக்கு ஆளாகி ராஜி ஒப்பந்தத்தில் இறங்கிய பின் தேசத்தின் முதலியதுகள் என்ன ஆச்சுது? உண்மையானதும் உறுதியானதுமான கொள்கைகளை எப்படி ஆனாலும் சரிப்படுத்திக் கொள்ளக் கூடிய மகாத்மா போன்றவர்கள் விட்டுக்கொடுததே இக்கெதி ஆனால் இனி சாதாரண மனிதன் விட்டுக் கொத்தால் அதன் கதி என்ன ஆகும் என்பதையோசித்தால் விளங்காமல் போகாது.

யோக்கியமாய் பேசுவோமானால் 'விட்டுக்கொடுத்தாலொழிய காரியம் நடவாது' என்கிற நிலை வரும்போது சுத்தமான கர்மவீரன் அந்தக்காரியத்தில் இருந்து விலகி விடுவது அறமாகுமே அல்லாமல் விட்டுக்கொடுத்து கருமத்தை ஆற்றலாம் என்பது தோல்வியை ஒப்புக்கொண்டதே ஆகும்,

(தன் தன் சொந்தக்காரியங்களுக்கு இவ்வளவு கடினமான தர்மம் பொருந்தாதெனினும் அதன் இரகசியமும் இது தான் அதில் விட்டுக்கொடுப்பதால் தன் காரியம் தான் கெட்டுப் போகலாமே அல்லாமல் வேறல்ல) முடிவாக ஒரு வார்த்தை "என்னையே எண்ணி இப்பெரும் பழி ஏற்றேன்" என்று இராவணன் சொன்னது போல் காங்கிரஸை எதிர்ப்பது என்கிற கொள்கையை நாம் முடிவு காட்டிய காலத்தில் எமக்கு உதவியாக யாரையும் நாம் எதிர் பார்த்து இத் தொண்டில் இறங்கவில்லை. (இதைப்பார்த்தவுடன் சிலருக்காவது "ராவணனைப் போல் இவனும் அழிந்து போவான்" என்றும் சொல்லத் தோன்றும். ராவணன் தனது கொள்கையாலாவது தனது பலக்குறைவாலாவது அழிந்துபோகவே இல்லை. எதிரிகளின் சூழ்ச்சியாலும் ராவணனது வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் சுயநலத்திற்கு ஆக எதிரிகளுடன் சேர்ந்துகொண்டுகாட்டிக் கொடுத்ததினாலும் அவர் அபஜயமடைய நேரிட்டது என்னலாம். எனினும் அவனது புகழும் சாமர்த்தியமும் நீதியும் இனியும் அடியோடு மறைந்துபோகவில்லை. அக்கதையின் ரகசியம் வெளியாகும் மக்களுக்கு பகுத்தறிவு ஏற்படும் காலத்தில் தானாகவே பிரகாசிக்கும் அதற்குகாலம் வரும்) ஜஸ்டிஸ்கக்ஷிகொள்கையே முழுதும் நமது கொள்கையல்ல பரஸ்பர சகாய எதிர்பார்ப்பதே தவிர வேறில்லை. ஜஸ்டிஸ் கட்சியும் ஒரு காலத்திலும் காங்கிரசின் உண்மையான கொள்கைகளை எதிர்க்கவேயில்லை. அரசியல் விஷயத்தில் காங்கிரஸ் செய்கிற புரட்டுகளை நாங்களும் செய்து எங்கள் பிரசாரம் அந்தப்பலனை அடைவோம்" என்று சொல்லி வருகிறதே தவிர வேறில்லை. ஆகலால் நாம் காங்கிரஸைப்பற்றி கொண்ட கொள்கைக்கு ஜஸ்டிஸ் கட்சியின் உதவி எப்பொழுதும் நமக்கு இல்லை. இதனால் மற்றவர்களை நாம் கட்டாயப்படுத்தவில்லை கட்டாயப்படுத்தப்போவதுமில்லை ஜஸ்டிஸ் கட்சித்தலைவர் யோக்கியதையும் நமக்குத் தெரியும். அவர்களின் லட்சியமும் நமக்கு தெரியும். ஆனால் அவர்கள் பார்ப்பன அரசியல் வாதிகளின் கங்காணிகளைவிட ஆயிரம் மடங்கு யோக்கியர்கள் என்பதும் பார்ப்பன அரசியல் வாதிகளால் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு பலனுண்டோ அதுபோலவே பார்ப்பனரல்லாத அரசியல் வாதிகள் எண்ணம் நிறைவேறுவதிலும் கொஞ்சம் குறைவாகவாவது ஏற்படும் என்கிறது மாத்திரம் நமக்கு உண்டு.

எனவே எல்லோரும் மகாநாட்டிற்கு வரவேண்டுமென்றும் ஒருவருக்கொருவர் கண்ணியமான அவரவர்கள் அபிப்பிராயங்களை பரிமாரிக்கொள்ளவேண்டும் என்றும் ஒத்து வருகிறதைப்பொருத்தவரையில் கண்ணியமாய் ஒத்துழைக்கவேண்டும் என்றும் மகாநாட்டில் பரஸ்பரசகிப்புத்தன்மையும் மரியாதையும் இருக்கவேண்டும் என்றும் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

---

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கூடாது சில வகுப்பார் மதிலைக்கூட பார்க்கக் கூடாது இல்லாவிட்டால் செருக்குத் தண்டம். நம் பாஷை சாமிக்குத் தெரியாது தரகர் இல்லாமல் காரியம் நடக்காது. தரகர் . பாஷை தான் அவருக்குத் தெரியும். சர்க்கார் செய்கைகளுக்கோ நல்லதாயினும் கெட்டதாயினும் ஒரு சட்டம் உண்டு சர்க்கார் வரிகள் எல்லாவற்றிற்கும் ஒரு சட்டம் உண்டு ஆனால் நம் மதத்தின் பேரால் ஏற்படுத்தி வசூல் செய்யும் வரிக்குச் சட்டம் இல்லை.

சர்க்கார் வசூலிக்கும் வரிக்குக் கணக்கு உண்டு மதத்தின் பேரால் வசூலிக்கும் வரிக்கு கணக்கு இல்லை. ஒவ்வொரு கோவில்களிலும் செலுத்தப்படும் வரி லட்சக்கணக்காய் முடிகிறது பலன் ஒன்றுமில்லை. மகம்மதியர் கிறிஸ்தவர் கோவிலில் மதபிரசாரம் உண்டு நம் கோவில்களில் வரி கொடுப்பவருக்கு மதபிரசாரம் மேலும் கிடையாது.

இனி மடாதிபதிகளோ கேட்க வேண்டியதில்லை அவர்களுக்கு முன் விடப்பட்ட சொத்துக்கள் மதப்பிரசாரத்திற்காக. இப்போது அவற்றின் வரும்படி போவதோ கூடா ஒழுக்கக்கட்டும் ஒரு வகுப்பைச் சேர்ந்த வாயாடி வக்கீல்கட்கும்.

அவர்கள் தான் போகட்டும். சமய ஆசாரியார்களோ, லோககுருக்களோ அவர்கள் ஊர் ஊராய்த் திரிந்து 'அத்தப்பதி' இச்சப்பதி என்று பட்டங்கள் விற்று நூறு, ஆயிரக் கணக்காய் பணம் தட்டி ஒரு வகுப்பாருக்கே சாமாராதனை செய்ய வேண்டியது. அவர்கள் தான் போகட்டும் குலகுருக்களோ அவர்களுடைய ஜோலி . தட்சணை வசூல் ஒன்று தான்.

நம்முடைய சமயம் இவ்வளவு சீர் கேட்டில் இருக்க இவைகள் ஒன்றையும் பற்றிக் கேட்கவில்லை வரவிற்குக் கணக்கு மாத்திரம் கோடு என்று கேட்க ஒரு இந்து மத தேவஸ்தானச் சட்டத்தை ஏற்படுத்தினால் அதுபொல்லாப்பு. "ஜஸ்டிஸ் கட்சியார் நம்மதத்தையே கொடுத்து விட்டார்கள்" என்று ஊரெல்லாம் தூற்றுகிறது. ஜன சமூகத்தில் அவர்கள் மேல்வெறுப்பை உண்டாக்குகிறது ஒரு ஆற்று வெள்ளத்தில் பட்டு போன நரி ஐயோ உலகமே போய் விட்டது. உலகமே போய் விட்டது" என்றதாம். ஒருவன் இது என்ன ஆச்சரியம் என்று எண்ணி அதை எடுத்துக்கரையில் விட்டு என்ன உலகமே போய் விட்டது என்கிறாய்? என நரி "ஆம் நீ என்னை வெள்ளத்திலிருந்து விடுவிக்கா விட்டால் எனக்கு உலகமே போய்விட்டதல்லவா? என்று சொல்லி ஓடிப்போயிற்றாம், அது போல் ஒரு வகுப்பாருக்கு வரும்படி குறைந்து விடுமானால் ஆம் அவருக்கு மதம்கெட்டுப்போய் விட்டதுதான்.

சமயம் இம்மட்டில் இனி சடங்குகளை எடுத்துக்கொள்வோம். அவைகளினுடைய பலன் ஒரு கூட்டத்தார் வயிறு வளர்க்க மற்றவர்கள் எல்லாம் உயிர் போகும்படி உழைக்க வேண்டியது தான்.

நாம் பிறந்தது முதல் ஒவ்வொரு சுபகாரியத்திற்கும் ஒவ்வொரு அசுப காரியத்திற்கும் ஒரு கூட்டத்தாரைக் கூப்பிட்டு, அவர்களுக்கு வரி கொடுத்து, அவரை வணங்கவேண்டும். அவர்களுக்கு அப்படிச்செய்யாவிட்டால் நமக்கு கடவுள் நன்மை கிடையாது அவர்கள் மாத்திரம் இல்லாமல் ஒன்றும் நடக்காது கல்யாண வீட்டில் அவர் சாவு மந்திரத்தைச் சொன்னாலும் அது நமக்கு அக்கரையல்ல. அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதை நாம் அவர்களுக்குக் கொடுத்தே தீரவேண்டுமாம். ஏனென்றால் அவர்கள் வயிறு வளர்த்து படித்து வேலைக்கு வந்து, நம்மை மிதிக்க வேண்டும் இது தான் சடங்காம்.

---

## ஸ்ரீமான் நாயக்கர்.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இன்றிரவு புறப்பட்டு கோயமுத்தூர் போய் சென்னை மகாண விசேஷ மகாண மகாநாடு முடிவடையும் வரை அதாவது 4—7—27 தேதிவரை அங்கேயே இருப்பாராகையால் அவருக்கு எழுதும் சொந்தக் கடிதங்களை கோயமுத்தூர் மகாநாட்டு உபசாரனைக் கமிட்டி மேல்பார்த்து என்ற விலாசத்துக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## பார்ப்பனிய போக்கிரித்தனம்.

கோவை மகாநாட்டின் போது ஆதிதிராவிடர்களை பேரூர் கோவிலுக்குள் அழைத்துச் செல்லப்படும் என்று பத்திரிகைகளில் காண்பது பார்ப்பனீய போக்கிரித்தனமே அல்லாமல் உண்மையல்ல.

அ. ஆ. இ. ஈ.

---

தானங் கொடுக்கவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வறியவர்க்குக் கொடுக்க வேண்டும், யோக்கியர்க்குக் கொடுக்கவேண்டும் "அப்படிக்கில்லாமல் ஒரு கூட்டத்தாருக்கேகொடுக்கவேண்டும் அவர்கள் எவ்வளவு அயோக்கியர்களாயிருந்தாலும் சரி" என்பது மூடத்தனம். நாம் அவர்களுக்குக் கொடுக்கா விட்டாலும் அவர்கள் பட்டினி இருந்து கெட்டுப் போய்விட மாட்டார்கள். நமக்குப் பாவம் ஒன்றும் வந்து விடாது அப்படிச் செய்தால் அவர்களும் சீக்கிரம் சீர் திருந்தி சோம்பலை விடுத்து தேகத்தை உழைத்துச் சம்பாதிக்கப் பழகிக் கொள்வார்கள். கிழிந்த பஞ்சாங்கத்தையும் காய்ந்த தெர்ப்பைப்புல்லையும் ஜயிக்க முடியாத நமக்கு எப்போது விடுதலை!! இந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து நாம் நம் மக்களை விடுவிக்க வேண்டும், ராஜரீய முயற்சிகளால் சிறுபாலோர்க்கும் உத்தியோகம் கிடைக்குமானால் பெரும் பாலோரான ஜனசமூகத்திற்கு வரிகள் அதிகமாகும். இது நாம்கண்டறிந்த விஷயம. காங்கிரஸ் சபை வருமுன் இரண்டு மெம்பர்களால் நடந்த ராஜரீக காரியங்களையே இப்போது 4 மெம்பர்களும் 3 மந்திரிகளும் நிர்வாகித்து வருகிறார்கள். அதனால்செலவு மாத்திரம் அதிகம் வரி அதிகம். காங்கிரஸ் முயற்சியால் வரும் நன்மை உத்தியோகங்கள் அந்த நன்மை சிலருக்கே, அதனால் பலருக்கும்கிடைப்பது வரி அதிகம் என்பது தான் ஆதலால் "சமயம் சடங்குகள்" இவைகளிலுள்ள மூட விசுவாசங்களிலிருந்தும் குருட்டு நம்பிக்கைகளிலிருந்தும் கட்டுப்பாடு களிலிருந்தும் ஜன சமூகத்தை விடுவித்து நம் மக்களை சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் அருகர் ஆக்குவதே உண்மையில் மேன்மையான முயற்சியாகும் அதுவே சுய ஆட்சியைக் கொடுப்பதுமாகும்.

இதன் பின் சில தீர்மானங்கள் செய்யப்பட்டது பின் தலைவர் அவர்கட்கும் சொற்பொழிவாளர் கட்கும் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் முடிவு பெற்றது. திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின்சொற்பொழிவும் செய்யப்பட்டதீர்மானங்களும் அடுத்த வாரம் வெளிவரும்.

## அய்யங்காரின் பார்ப்பனப் பிரசாரம்.

ஸ்ரீமான் சினிவாசய்யங்கார் ஸ்ரீமான்கள் முத்தரங்க முதலியார் ஒ. கந்தசாமி செட்டியார் ஆகிய இருவரையும் பார்ப்பனரல்லாதார் என்கிற பெயருக்காக கூட இழுத்துக் கொண்டு தென்னாட்டில் பார்ப்பனப் பிரசாரம் செய்து வருவதும் அவ்விரு கனவான்களை ஏவி விட்டு பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாகப் பேசும்படி செய்துவருவதும் பத்திரிகையில் பார்த்திருக்கலாம்.

ஆனாலும் அவர்கள் போகிற விடங்களில் ஜனங்கள் கேழ்விகள் கேழ்க்க ஆசைப்படுவது இந்தக் காலத்தில் மிகவும் சகஜமானது என்பதும் யாவருக்கும் தெரியும். பிரசாரத்திற்குப் போகிறவர்கள் கூடுமானவரையில் ஆவது நியாயமான கேழ்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியது பிரபலமான பிரசாரகர்களின் கடமை. அப்படிக்கில்லாமல் கேழ்வி கேட்கிறவர்களை அடக்கிவிடவும் அவர்களை தொந்திரவு செய்ய ஆள்களைத் தயார் செய்து ஏவிவிடுவதும் அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக்கொள்ளமுடியுமே அல்லாமல் பிரசாரம் கோரிய பலனைத் தருவது கஷ்டமான காரியம் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இதுவரையில் பார்ப்பன பத்திரிகைகளில் வந்த சேதிகளைக் கொண்டே பார்ப்போமானால ஸ்ரீமான்கள் சினிவாசய்யங்கார் கோஷ்டிகளான ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி எம். கே. ஆச்சாரியார் குப்புசாமி முதலியார், அமீத்கான் சாயுபு, கந்தசாமி செட்டியார், முதலியவர்கள் எல்லா, கனவான்கள் சென்று பிரசங்கம் செய்த கூட்டங்கள் எல்லாவற்றிலும் ஏறக்குறைய ஏதாவது ஒரு கலவரம் நடந்ததாகவே காணப்படுகிறது. அய்யங்காரின் பிரசாரத் தன்மை எப்படி இருந்தாலும் சமூகத்திற்கோ தேசத்திற்கோ அது எவ்வளவு கெடுதியைத் தரத்தக்கதாயிருந்தாலும் நியாயத்தையும் மரியாதையையும் யோக்கியத்தையும் உத்தேசித்து நாம் சொல்லுவதென்னவென்றால் கூட்டங்களில் கலவரம் நடந்ததாக ஏற்படுவதானது அதற்குக் காரணமாயிருக்கிறவர்களின் இழிகைமை என்றே சொல்லுவோம். ஸ்ரீமான் அய்யங்கார் மாத்திரமல்ல இன்னமும் வேறு யாரானாலும் அவரவர்கள் இஷ்டத்தின் பிரகாரம் பிரசாரம் செய்ய உரிமையுடையவர்களே ஆவார்கள். அவ்விதபிரசாரத்தை எதிர்க்கிறவர்கள் ஆண்பிள்ளைகளானால் தாராளமாகப் பேச இடம் கொடுத்துவிட்டு அவர்கள் சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொன்னபிறகு ஏதாவது கேழ்வி இருக்குமானால் அதுவும் அவர்கள் அந்த சமயம் பேசிய பேச்சுகளில் கேழ்வி பிறக்குமானால் மாத்திரம் கேழ்வி கேழ்க்கவேண்டும் அவற்றிற்கும் அவர்கள் பதில் சொல்லவில்லையானால் மறுநாள் கூட்டம் கூட்டி தாராளமாக மறுத்துபேசவேண்டும் அப்படிக்கு இல்லாமல் இடையில் கேழ்வி கேட்பதும் பதில் சொல்ல இஷ்டமில்லாவிட்டால் கட்டாயப் படுத்துவதும் மனுஷத்தன்மைக்கு ஏற்ற காரியமல்லவென்றே சொல்லுவோம். கண்ணியமான முறையில் துண்டுப் பிரசுரங்களை வழங்கலாம். அதுவும் அக்கூட்டத்திற்கு இடைஞ்சலுண்டாகக்கூடியதாக இருக்கக்கூடாது என்று சொல்லுவோம். தனியாகவும ஜனங்களைக் கூட்டிவைத்து விஷயங்களை எடுத்துச்சொல்ல போக்கிடம் இல்லாதவர்கள்தான் வேறு ஒருவர் கூட்டிய கூட்டத்தில் போய் கலவரம் செய்வார்களே ஒழிய ஆண்மையுள்ளவர்கள் ஒருக்காலும் கலவரம் செய்யப்போகமாட்டார்கள் என்பது நமது அபிப்பிராயம். சமீபத்தில் நாகபட்டணத்தில் நடந்த விஷயத்தைப்பற்றி நாம் சென்ற வாரம் கண்டித்து எழுதியிருந்தது நேயர்கள் கவனித்திருக்கலாம். அதற்குப்பிறகும் திண்டுக்கல் மன்னார்குடி நெல்லூர் முதலிய இடங்களிலும் குழப்பத்திற்கு முயற்சித்ததாகவும் ஒரு முப்பங்கூட்டு நடந்ததாகவும் பார்க்க மிகுந்த வருத்தமடைகிறோம். மதுரையின் கூட்டத்தில் ஒரு கல் விழுந்ததாக காணப்படுகிறது இது ஒரு கோழையின் செய்கையே அல்லாமல் ஆண்மகன் செய்கை அல்ல. அந்தக்கல்லை ஸ்ரீமான் சினிவாசய்யங்காரே ஸ்ரீமான் கந்தசாமி செட்டியாரை விட்டு ஒரு ரெக்குளலத்தில் எடுத்துக்கொண்டதாக பாவனை உண்டாக்கி விட்டாராம். இதுவும ஒரு தந்திரமான காரியமென்றே சொல்லலாம் ஆனாலும் பார்ப்பனக்கட்சிக்குப் பணம் சேரவேண்டும் என்கிற ஆசை உள்ளவர்களை இம்மாதிரியே கூட்டத்தில் கல்லெறியத் தூண்டும. ஏனெனில் ஒரு கல்விழுந்தால் 5 ரூபாய் வருமானமானால் நூறுகல் விழுந்தால் நூத்தைந்து 500 ரூபாய் லாபமாச்சு என்று எண்ணிக்கொண்டு பார்ப்பனப் பிள்ளைகளே தம் கட்சிக்குப் பணம் சேர்க்க கல்லுப்போட முன்வரவேண்டிவரும ஆகலால் இந்தத்தந்திரமும் அவ்வளவு புத்திசாலித்தனமானதல்லவென்றே சொல்லுகிறோம.

### திருவண்ணாமலை.

15-6-27 டவுன் பஞ்சாயித்துக் கோர்ட்டின் தலைவர் தேர்தல் நடந்தது. எதிர் கக்ஷியினராக உள்ளவர்கள் என்னென்னவோ சூழ்ச்சிகள் செய்தும் பயனில்லை. தேர்தலை நடத்த திருவாளர் வேதபுரி முதலியார் பி. ஏ., ரெவனியூ இன்ஸ்பெக்டர் விஜயம் செய்திருந்தார். தேர்தலில் பார்ப்பனரல்லாதார் சங்க உதவி காரியதரிசியான திரு. முத்துசாமி நயினார் அவர்கள் பிரஸிடெண்டாக தெரிந்தெடுக்கப்பட்டார் தேர்தலை கவனிக்க வந்திருந்த பொது ஜனங்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள் என்று T. S. நாராயணசாமி எழுதுகிறார்.

---

### வேலூர் முனிசிபாலிட்டிக்கு ஜெய்

வேலூர் முனிசிபல் சேர்மென் பதவியானது அவ்வூர் பார்ப்பனரல்லாத கனவான்களின் போட்டியினால்சென்ற 2 வருஷ காலம் பார்ப்பன வயப்பட வேண்டியதாகி பார்ப்பன ஆதிக்கமாக இருந்து வந்தது ஆனால் இப்போது அவ்வூர் பார்ப்பனரல்லாத கனவான்களுக்கு சுயமரியாதைஉணர்ச்சிஏற்பட்டதின்பலனாய் ஸ்ரீமான் பத்பநாபமுதலியார் அவர்கள் போட்டியன்னியில் வேலூர் முனிசிபல்சேர்மெனாய் தெரிந்தெடுக்கப்பட்டதாகதெரிந்து அம்முனிசிபாலிட்டியையும் பார்ப்பனரல்லாத மக்களையும் பாராட்டுகிறோம

## தனவணிகர் நாட்டில் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள், ஜுலை-ௗ 2க்கு மேல் சுமார் 10 நாட்கள் தனவணிகர் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடும்.

தமிழ்நாட்டில் தற்காலம் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான ராஜீய சமூக நிலைமையை முன்னிட்டு நிவிரமான கொள்கைகளை நிலைபெறச்செய்ய அன்னார் படும்பாடு உலகமறிந்ததே. ஆகையால் அன்பர்கள் அன்னாரை எங்கெங்கே வரவேற்று அன்னாரின் அரிய சொற்பொழிவுகளைக்கேட்க ஆவலுற்றிருக்கின்றனரோ, அவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் சுற்றுப்பிரயாண அறிக்கை தயாரிக்க அனுகூலமாயிருக்கும்.

ஜில்லா மகாநாடொன்று அவர் தலைமையில் நடத்த ஏற்பாடுகள் நடந்துவருகின்றன இடமும் காலமும் அன்பர்களின் அபிப்பிராயத்தெரிந்து பின்னர் அறிவிக்கப்படும்,

இங்ஙனம்,<br>
தே. வே. அருணாசலம்,<br>
ஆவி. லெ. அருணாசலன்,<br>
சீருத்திவாஸன்,<br>
காரைக்குடி.

---

## சென்னை மருத்துவர் சங்கம் பொதுக்கூட்டம்.

16-6-27 ம் நாள் மாலை 5 மணிக்கு சென்னை தங்கசாலை தெரு 221ம் எண்ணுள்ள மருத்துவ சங்க நிலயத்தில் திரு எம். சரவண பிள்ளையின் அவைத் தலைமையில் மருத்துவர்களும் அன்பர்களும் பலர் கூடி அடியிற்கண்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு மேன்மைதங்கிய கவர்னருக்கும், கனம் முதல் மந்திரி அவர்களுக்கும் அனுப்பப்பட்டது.

1. இச்சங்கத்தார் மகாநாடுகள் நடத்தித் தீர்மானங்களை அரசாங்கத்திற்கு அனுப்பியும், கோல் கனம லா மெம்பர் மந்திரி முதலியவர்களைக் கண்டு தங்கள் வகுப்பினருக்குள்ள குறைகளையெடுத்துச் சென்ற வருஷம் (டெபுடேஷன்) போய்ச்சொல்லப்பட்ட காலத்தில் கனம லா மெம்பர் இந்தவருஷம் சட்ட சபையில் தமிழ் நாட்டு மருத்துவர் ஒருவரை நாமினேஷன்செய்வதாகச் சொன்னபடி செய்யாததைப் பற்றிவருந்துவதாகவும்

2. தற்காலம் சென்னை நகர்காபப்புக் கழகத்தில் ஓரிடம் காலியாயிருப்பதற்குமருத்துவச்சங்கத்தலைவர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை நியமிக்கவேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேறி இதனை கவர்ன்மெண்டுக்கும் கனம் முதல் மந்திரிக்கும் அனுப்புவதாக தீர்மானிக்கப்பட்டது.

---

ஸ்ரீமான் முதலியார் அவர்களும் கே. கிருஷ்ணசாமி நாயுடுகாரவர்களும் ஒற்றுமையாய் இருந்து நாட்டின் நலனையும் சமூகத்தின் நலனையும் தேடுவார்களாக.

## என்னவோ?

மதுரையில், இளந் தமிழக் கூட்டத்தார் ஆயுதச்சட்ட மறுப்புத்துவக்கிவிட்டதாகத் தெரிகிறது. இவர்களுடைய துணிவையும் தீர்மானத்தையும் நாம் போற்றாமல் இருக்க முடியாது. ஆனால் இவர்களுக்கு முன்யோசனை அதிகமில்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். முன்யோசனையைப்பற்றிப் பேசினாலே,நாம் இக்கூட்டத்தாரால் கோழை என்றும் கருதப்படலாம். அவ்வாறு கருதப்பட்டாலும் பாதகமில்லை. துண்டு துண்டாக,நாட்டில் எழும் சுதந்திர வீரர்களையும் இயக்கங்களையும் அரசாங்கத்தார் வீழ்த்திவிடுவார்கள். ஆயுதச் சட்டம் சாதி,மத,வகுப்புவேற்றுமையின்றி,இந்தியாவில் இருக்கும் யாவருக்கும் அவமானத்தை விளைத்து வருகின்றது. எனவே,ஆயுதச் சட்ட மறுப்பை நாட்டின் பொது இயக்கமாகச் செய்வது கடினமான காரியமல்ல. இதைக் கவனிக்காமல் மதுரை வீரர்கள் செயல் செய்வதைப்பற்றி நாம வருந்துகின்றோம். வீரர்கள் இவ்வாறு சிதறுண்டு போனால்,நாட்டுக்கு எவ்வாறு, எப்பொழுது விடுதலை ஏற்படும்? (ஊழியன்)

## துவார் மகாநாடு.

ஒரு சில பார்பனர்கள் துவார் என்ற சிறு கிராமத்தில் கூடி வருணாசிரமத்தை நிலைக்க வைக்க வேண்டுமெனத் தீர்மானம் செய்தார்களாம். சமுத்திரத்தின் அலைகளை விளக்குமாற்றினால் தடுக்க முயன்ற பேதைப் பெண்ணைப்போல, இவர்கள் வினையாற்றுகின்றார்கள். வருணாசிரமம் நூல்களிலே தான் காணப்படுகின்றது. சாதிகள் செத்துவிட்டன கடவுள் வந்தாலும் இனி அவைகளை உயிர்ப்பித்து எழச் செய்ய முடியாது ஒரு சிலர் சேர்ந்து செய்தமூடச் செயலால் ஒரு சமூகத்தாருக்கே கெட்ட பெயர் வருமாயின், அச்சிலர் மதியீனர்கள் என்று கூறவும் வேண்டுமா? வெள்ளையர்களிடம சரண்புகுந்துக் கூலிவேலை செய்து வயிறு பிழைக்கும் பார்ப்பனர்கள் சாதி இருமாப்புக் கொண்டு வருணாசிரமத்தைப்பற்றிப் பேசினால் அது நகைப்புக் குரியதேயன்றி, வெறுப்புக்கும் பகைமைக்கும் உரியதல்ல தைரியத்துடனும் அகத்தூய்மையுடனும் நாட்டுக்குத் தொண்டு செய்யப் பார்பனர்கள் முற்பட வேண்டும். (ஊழியன்)

## புத்திகெட்ட வைதீகம்.

மலையாளத்தில் பொன்னானி என்ற கிராமத்தில் 18 வயதுடைய நம்பூதிரி விதவைப்பெண்ணொருத்தி மற்றொரு இளைஞருடனோடிப்போய்விட்டதற்காக அங்குள்ள மற்ற நம்பூதிரிகள் அப்பெண்ணின் குடும்பத்தாரையே தங்கள் ஜாதியை விட்டுத் தள்ளிவிட்டார்களாம். இளம் பெண்களை விதவையாக வைத்துப்பார்த்துக்கொண்டிருப்பது கொடுமை. பெண் கெட்டதற்கு முரட்டுத்தனமான வைதீகமே காரணம். இக்கொடுமைகள் ஒழிகின்ற வரையில் இந்நாட்டுக்கு கெதி மோக்ஷம் வரப்போவதில்லை என்பது திண்ணம. (குமரன்)

## வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

ஷை மகாநாட்டை கூடிய சீக்கிரத்தில் கூட்டுவிக்க பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுவருகின்றன. மகா நாட்டின் உபயோகத்திற்காக கோலார் தங்கவயல் பிரபல கண்ட்ராக்டரும், போளூர் தாலூகா செட்பெட் கிராமவாசியுமான ஸ்ரீமான் C. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் ஸ்ரீமான்கள் ராவ்பகதூர் K. கிருஷ்ணசாமி நாயுடு ஜில்லா போர்ட் பிரசிடெண்ட், K P. சிதம்பர முதலியார் வெல்லூர் தாலூகா போர்ட் பிரசிடெண்ட் P. ஸ்ரீனிவாச முதலியார் அவர்கள் ராணிப்பேட்டை தாலூகா போர்ட் பிரசிடெண்ட், V. ஷண்முக முதலியார் K. C. கந்தசாமி முதலியார் ஆகிய கனவான்கள் கோறியபடி 20 மூட்டை பச்சை அரிசிகொடுத்துதவியுள்ளார்கள் ஜில்லாவாசிகள் இவ்வுதவியை பெரிதும் பாராட்டுகின்றனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## வட ஆற்காடு ஜில்லா.

திருவத்திபுரம் சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டி:—

சென்ற 15-6-27 நடந்த ஷை கமிட்டியின் பொதுக்கூட்டமொன்றில் ஜஸ்டிஸ் கக்ஷியைச்சார்ந்த ராணிபேட்டை தாலூகா போர்டு பிரசிடெண்ட் ஸ்ரீமான் பி.ஸ்ரீனிவாச முதலியார் அவர்கள் ஷை கமிட்டியின் தலைவராக ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மதிப்புரை.

மனுநீதி மர்மம் முதற் பாகம் என்னும் ஒரு புத்தகம் சுவாமி சிவாநந்த சரஸ்வதி அவர்களால் இயற்றப் பெற்றதை திருநெல்வேலி சமரச நிலையம் திருவாளர் சு. பெருமாள் அவர்களால் நமக்கு அனுப்பப்பட்டது. அதில் மனுதர்ம சாஸ்திரம் என்னும் ஒரு அக்கிரமமான நூலில் நமது சுயமரியாதையை பாதிக்கத்தக்கதாக உள்ள விஷயங்களைப் பொறுக்கி அத்தியாய எண்ணிக்கை சுலோக எண்ணிக்கை முதலியவைகளை குறிப்பிட்டு சுமார் 100 சுலோகங்கள் வரை தமிழ் மொழிபெயர்ப்பைப் போட்டு அதன் கிழ் சுவாமி சிவாநந்த சரஸ்வதி அவர்களின் கருத்தையும் போட்டு சிறு புத்தகமாக சமரச நிலைய வெளியீடு நெ. 1 என்பதாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதை வாங்கி அதிலுள்ள சுலோகத்தின் கருத்துக்களை கவனிக்கிறவர்களுக்கு பார்ப்பனர்களின் சூழ்ச்சி இன்னது என்பதும் நமது சுயமரியாதைக்கு அவர்களும் அவர்களது மதமும் ஆதாரமும் எவ்வளவு கொடிய விரோதமென்பதும் எளிதில் விளங்கும், அதோடு பிராமணர், சூத்திரர், என்கிற ஜாதிப்பிரிவுகள் நமக்கு எற்பட்டது என்பதும் அதை ஒப்புக்கொள்வது மனிதத்தன்மைக்கு எற்றதா என்பதும் விளக்கும், இப்புத்தக விலை அணா 2. கிடைக்குமிடம்

உ. சு. பெருமாள்
சமரசநிலையம்
சிக்கநாசய்யன் கிராமம்
திருநெல்வேலி


## தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

உங்களுக்கு ஓர் நற் சகுனம்

## ஜோதிடம்

தர்ம நியாயமான 6 கேள்விகளுக்கு ரூபாய் ஒன்று பிரதி ஒவ்வொரு கேள்விகளுக்கு 0-4-0 ஒரு வருஷத்துக்கு பலன் ரூ 5-0-0 ஆயுள்வரை பலன் ரூ. 50.

ஸ்ரீசிவ சுப்ரமண்ய சர்வ ஜயவசிகரணி கவசம் கைமேல் பலன். இராஜாக்களின் அபிமானம் புருஷனிடம் அன்பில்லாத மனைவி, மனைவியிடம் அன்பில்லாத புருஷவசியம் குடும்பங்களில் ஏற்படும் கலகங்களின் நிவர்த்தி பக்தி விசுவாசம்

இக்கவசம் மிக்க கியாதி பெற்றது பக்தி விசுவாசம், சரித்திரம் முதலியது அணுகாது.

மானேஜர்,
ஸ்ரீசிவ சுப்பிரமணிய சோதிட கவச நிலையம்
திருத்தணி
சித்தூர் ஜில்லா


"சுயமரியாதையே நமது பிறப்புரிமை சுயராஜ்யம் வயிற்றுச் சோற்று உரிமை."


## ஓர் வெளிவராத ரகசியம்.

### தெரிய விருப்பமுண்டோர் தேவை.

உலகப்பிரசித்திபெற்று ஓர் ஆபத்துநேசனைப்போல் உதவிவரும் அமிருதாஞ்சனம், குடும்பாஞ்சனம் என்னும் தலைவலி மருந்தைப்போல விசேஷகுணமுள்ள ஓர் "அற்புத பெயின்பாம்" என்னும் தலைவலி மருந்து செய்யும்விதம் இதுவரையிலும் மர்மமாயிருந்ததை இப்போது கற்று லாபமும் கீர்த்தியும் பெற விருப்பமுள்ளோர் 100 பேர்வழிகள் தான் தேவை. இதுவரையிலும் 60 பேர்வழிகள் சேர்ந்துவிட்டார்கள். உடனே உங்கள் விலாசமும் ரூபாய் 5தும் அனுப்பி ஷை "பெயின்பாம்" செய்யும் ரகசியத்தை தெரிந்து கொள்ளுங்கள். அல்லது வீ. பி. மூலியமாய் பெற்றுத் தெரிந்துகொள்ளுங்கள்,

**T K துரை**

No. I. K. (பெயின் பாம் டிப்போ,)
10. தென்னூர், திருச்சினப்பள்ளி

[4-ம் பக்கத் தொடர்ச்சி].

இருப்பது போதும். ஆகவே பார்ப்பனரல்லாதாரால் நடைபெறும் பத்திரிகைகள் உண்மைக்கிளர்ச்சி கண்டு உறுதிகொண்டு நிற்க வேண்டுதல் செய்வதோடு ஸ்ரீ அய்யங்காரின் மயக்கம் தெளிவடையச் செய்தலும் வேண்டும்.

(3) "ஆரம்பிப்பதற்கு முன்னால் சாஸ்திரம் படித்து அறிந்தவர்களையும், ஜனங்களிடத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களையும் வரவழைத்து மகா நாடு ஒன்று நடத்த வேண்டும் என்றும் எழுதுகிறார். ஸ்ரீ அய்யங்காரின் அபிப்பிராயம் நன்றென்பதில் அதிசயமொன்றுமில்லை. ஆனால் மடாதிபதிகள், மகந்துகள், ஆச்சாரிகள் முதலியவர்களில் சாஸ்திரம் படித்தறிந்த "கற்றறி மூடர்"களையும்; சாஸ்திரம்படித்த "மகா மகோ பாத்தியாய" வே. சாமிநாதய்யர் இன்னும் அவர் போன்ற "வித்துவ சிரோன்மணி"களையும்; காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் அய்யங்கார் பேச்சுத்திறமை வாய்ந்த ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யர், ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், ஓ. கந்தசாமி செட்டியார், டி. ஆதிநாராயண செட்டியார் போன்ற ஜனங்களிடத்தில் செல்வாக்குப்பெற்ற "தலைவர்களை"யும் மகாநாட்டு மேடையில் ஏற்றி உட்காரவைத்துப்பேசினால் யோக்கியமான முடிவுக்கு வரக்கூடுமா?

இதில் ஸ்ரீமான் ஜே. என். ராமநாதன் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

முடிவில் ஸ்ரீ அய்யங்காரவர்களுக்கு ஒரு அபிப்பிராயம் கூற விரும்புகிறோம் எம்பெருமான் "மகாத்மா காந்தியடிகளையும், அன்னவருடைய தெய்விக—சுத்தசன் மார்க்க-சத்தியாக்ரஹ தியாக-விடுதலை இயக்கத்தையும் ஒதுக்கிவிட்ட நம் நாட்டுச்சுயநலக்காரர்கள் கோயிற்பிரவேச இயக்கத்திற்கு ஆக்கம் தேடுவார்கள் என்று எண்ண இடமேயில்லை. ஆகையால் பிரஸ்தாப விஷயத்தில் "தாழ்த்தப்பட்ட வகுப்பார்" சத்தியாக்ரஹத்திற்கு தயாராகி வரவும், "தாழ்த்திய வகுப்பார்" ஆதரவு கொடுக்கவும், பலவகை சாதனங்கள் தேடவும், இதற்கிடையில் சர்க்கார் குறுக்கிடுவதும் மிக்க தொல்லைதான். ஆகையால் தாழ்த்தப்பட்ட வகுப்பாரைக் கண்டவுடன் உயிர்போய்விடும் சுவாமிகள் இருக்கும் ஆலயங்களை அனைவரும் பஹிஷ்காரம் செய்துவிடுவது மிகவும் நல்லது. தாழ்த்தப்பட்ட வகுப்பாரை ஏற்காத அந்த சுவாமிகளை தூக்கி வெளியிற் கொண்டுவந்து குளம், கிணறு, ஆறு இவைகளின் பக்கம் குப்புறப்போட்டுவிடுங்கள். ஜனங்களுக்கு மிக்க உபயோகமுள்ளதாயிருக்கும். பக்த கோடிகளைப் பார்க்கமாட்டாத அந்த சுவாமிகளை கடவுளின் அம்சமாக எப்படிக் கருத முடியும். மேலும் அக்கோயில்களுக்குக் கொடுக்கும் சர்வமானியங்களையும் நிறுத்தி விடுங்கள். குருக்களுக்குக் கொடுக்கும் தண்டவரியை எடுக்கப் பிரயாசைப்படுங்கள் குருட்டு நம்பிக்கையும், தரித்திரமும் நாட்டைவிட்டகலும். சுவாதீனம், விடுதலை, சுதந்திரம் உடன்கிடைக்கும் சத்தியாக்ரஹம் அவசியமென நேருங்கால். போர்முனையிற் செல்வோம். மகாத்மா வாழ்க.

---

## திருப்பூர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்.

### காங்கிரசில் ஜஸ்டிஸ் கட்சி சேரக்கூடாது பிரசிடெண்ட் எழுதுகிறார்.

இச்சங்கத்தின் ஆதரவின் கீழ் 17-6-27 மாலை 6 மணிக்கு திருப்பூர் செட்டியார் சத்திரத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது.

பல பிரபல வியாபாரிகள் வந்திருந்தனர் கூட்டத்திற்கு லக்ஷ்மி விலாச பாங்கு காரியதரிசி திரு. மு. தருமலிங்கம் செட்டியார் தலைமை வகித்தார்கள்.

பாங்கு பொக்கிஷதார் திரு. சி. பி. முத்துசாமி செட்டியார் அவர்களும் திருவாளர் டி. ஆர். சுந்தரம் பிள்ளை பி. ஏ. அவர்களும் காங்கிரசும் ஜஸ்டிஸ் கட்சியும் என்னும் விஷயமாய் பிரசங்கங்கள் செய்தனர். பின்னர் அடியில் கண்ட தீர்மானம்.

திரு கே. வி. வெங்கிடாசலம் பிள்ளை அவர்களால் பிரேரேபிக்கப் பெற்று திரு. சி பி. முத்துசாமி செட்டியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு. திரு. பி. வரதராஜுலு செட்டியார் அவர்களால் ஆதரவு பெற்று சபையோர்களால் ஏக மனதாக நிறைவேறிற்று.

தீர்மானங்கள்

"தற்காலம் இம் மாகாணத்திலிருக்கும் ஜஸ்டிஸ் கட்சியானது காங்கிரசுடன் ஒன்று சேர்ந்து விட வேண்டுமென்று நிலவி வரும் விஷயத்தை தீர்க்க ஆலோசனை செய்ததில் ஜஸ்டிஸ் கட்சியார் சேர்ந்தால் பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றம் பாதிக்கப்படுமென்பதாக திண்ணமாய் அபிப்பிராயப்படுவதால் இதே மாதிரியே கோயமுத்தூர் விசேஷ மாகாண மகா நாட்டிலும் ஜஸ்டிஸ் கட்சி காங்கிரசில் சேரக்கூடாதென்று தீர்மானம் செய்யும்படி இக்கூட்டத்தார் சிபார்சு செய்கிறார்கள்"

தீர்மானம் (2)

அடுத்த ஜூலை மாதம் 2, 3 தேதிகளில் கோயமுத்தூரில் கூடும் விசேஷ மாகாண மகா நாட்டிற்கு பிரதிநிதிகளாக அடியில் கண்ட கனவான்கள் சபையோர்களால் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் திருவாளர்கள்:— மு. தருமலிங்கம் செட்டியார் கே. எஸ் கந்தசாமி செட்டியார் கே. எஸ். திருஞான சம்மந்தம் செட்டியார், டி. எஸ். முருகநாதம் செட்டியார், குரு ராமலிங்கம் செட்டியார், பி. எம். ஆர். மாணிக்க சுந்தரம் செட்டியார், சி. பி. முத்துசாமிசெட்டியார், கே. வி. வெங்கிடாசலம் பிள்ளை, மா. வெ. கருப்பண்ணசெட்டியார், கே. எஸ் ராமசாமி கவுண்டர் மு. ந. சிக்கண்ண செட்டியார், கே. வெங்கிட்டப்ப கவுண்டர் முதலிய இன்னும் பல கனவான்கள்.

தீர்மானம் (3)

திருப்பூர் பிரபலதனவந்தரும் ஆவலப்பம் பட்டி ஜமீன்தார் அவர்களுமாகிய திருவாளர் க. சுப்பிரமணிய செட்டியார் அவர்களால் நடத்தி வரும் திருப்பூர் சத்திரத்தில் பிராமணர்களுக்கு மாத்திரம் சாப்பாடு போடுவது என்பதை மாற்றி இனிமேல் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் யாவருக்கும் சாப்பாடு போடும் படியாக இக்கூட்டத்தார் வணக்கமாய்கேட்டுக்கொள்ளுகிறார்கள்

என்ற தீர்மானம் திரு. மு. தருமலிங்கம் செட்டியாரால் பிரேரேபித்து திரு. பி. எம். ஆர். மாணிக்க சுந்தரம்செட்டியாரால் ஆமோதித்து திரு. டி. எஸ் முருகநாத செட்டியாரால் ஆதரித்து சபையோர்களால் ஏக மனதாக நிறைவேறியது.

சுமார் 8 மணிக்கு தலைவர் அவர்களுக்கு வந்தனம் கூறியபின் கூட்டம் டாக்டர் நாயருக்கு ஜேய். தியாகராயசெட்டியாருக்கு ஜேய், என்ற கோஷத்துடன் இனிது கலைந்தது.

---

## திருப்பூர் தேர்விழாவில் அன்னதானம்.

வழக்கம் போல் இவ்வருடமும் திருப்பூர் அருணாசலக் கம்பிரான் என்கிற படியூர் சுவாமியாரின் பெரு முயற்சியால் உள்ளூர் தனவந்தர்களின் நன்கொடையைக்கொண்டு திருவிழாக்காலம் பூராவும் வெகு விமரிசையாக அன்னமளித்து ஏழை பாதேசிகளுக்கு அளிக்கப்பெற்றது.

கோடைகாலம் பூராவும் மேற்படி சுவாமியார் தண்ணீர் பந்தல் தர்மம் செய்து வருவதும் பாராட்டத்தக்கது என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

## பாபநாசத்தில் பார்ப்பனீயம் ஒழிந்தது

இந்தாலூகா போர்டு தேர்தல் ஆரம்பித்ததும் பக்தவத்சலம் ஐயரின் கூட்டம் மேலட்டூர் தொகுதி தேர்தலில் செய்த அநீதிக்கு அளவில்லை பார்ப்பனர்களுக்குப் பார்ப்பன உத்தியோகஸ்தர்கள் சட்டப்பூர்வமாக ஆதரவு அளித்தார்கள். மந்திரி சுப்பராயன் அவர்களும் தடை யுத்திரவு பிறப்பித்தார் இவ்வளவு சூழ்ச்சியையும் உதறித் தள்ளி வெற்றியுற்ற இத்தொகுதியின் இரு கனவான்களையும் போற்றுகிறோம் சுயமரியாதை வாழ்க.

| | |
|---|---|
| எஸ். சத்திய தொரக்கொண்டார் | 256 |
| ஜி. ஜெகநாத கோபால் | 225 |

தோற்றவர்கள்.

| | |
|---|---|
| எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் | 91 |
| நாராயணசாமி அய்யா | 64 |
| வி. கிருஷ்ணசாமி | 3 |
| பாசுபதி கொடுவாராயா | 2 |
| ராஜரத்தின முதலியார் | 2 |

சி. நடராஜன் எழுதுகிறார்.

---

கும்பகோணம்:— ஸ்ரீ காமாக்ஷி விலாச வாசகசாலை மூன்றுவதாண்டு நிறைவிழா கொண்டாட்டமானது ஸ்ரீ மங்களாம்பிகா தியேட்டர் ஹாலில் பிரபவ வருஷம ஆனி மாதம் 12 தேதி (26-6-27) ஞாயிற்றுக்கிழமைமாலை3-மணிக்குபாங்கிமலை பொது ஜன ஊழிய சங்க காரியதரிசி திருவாளர் பி. சொக்கலிங்கம் ஆச்சாரியார் அவர்கள் தலைமையின் கீழ நடைபெறுமாதலால் எல்லா கனதனவான்களும் விஜயம் செய்து சிறப்பிக்கவேணுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

11 (5ம் பக்கத் தொடர்ச்சி.)

தான் என்ன இங்கிலீஷ் படித்து இஞ்சினீர் எப்பொழுதானுனே அப்பொழுதே அவன் கெட்டுப்போவான். அவனுக் கெல்லாம் சாஸ்திரமென்ன தெரியும்? சாஸ்திரங்களெல்லாம் எங்களிடமிருக்கிறது என்று சமாதானம் சொல்லி பணம் பறித்து வருவார்கள். "ஆம் அப்படியே! நீ சொல்லுவது அவர்கள் சொல்லுவது எங்களுக்குத் தேவையில்லை. அவன் எங்கள் பணத்தையே தின்று நன்றி கெட்டவன். நீ வாங்கும் எங்கள் பணத்தால் உன் மகனும் பி. ஏ., பி. எல்., எம். ஏ. படித்து நீயும் அவனும் பின்னுல் இதேமாதிரி தான் நன்றிகெட்டவர்களாவீர்கள். ஆனதால் நீயும் வேண்டாம். அவனும் வேண்டாம். எங்கள் கிரியைகளை நாங்களே செய்துகொள்ளுவோம்" என்று சொல்லும் தன் மதிப்புடைய ஆண்பிள்ளைகளான "வைசிய"ச் செட்டிமார்களைக் காணுேமே! 'பிராமணர்களே உங்களை வைசியர்களல்லவென்று சொல்லுகையில் நாங்கள் வைசியர்கள்: நாங்கள் வைசியர்கள் என்று பணத்தைக்கொடுத்து அவன் காலில் ஏன் விழவேண்டும்? பூவைசியர், தனவைசியர், நாட்டுவைசியர், ஆரியவைசியர் என்பதாக அநேக வைசியர் பேர்வைத்துக்கொண்டாலும் பணம் பறிக்கிறவரையிலும் தான் இந்தப் பார்ப்பான் வைசியனென்று சொல்லுவான் வீட்டை விட்டு வெளியிலும், மேடையிலும் போனவுடன் "வைசியன் என்கிற ஜாதி கலி ராஜியத்தில் இல்லை. அழிந்து போய்விட்டது என்றுதானே சொல்லுவான். இதை அநேக காலமாகச் சொல்லியும் வருகிறார்கள். எப்படியாவது வைசியன் என்று பார்ப்பான் சொல்லவேண்டுமென்று படாதபாடுபடுவது நமக்கு ஏற்பதில்லை. "மதியாதார் தலைவாசல் மதித்தொருக்கால் மிதியாமை கோடிபெறும்" என்று ஔவையார் சொன்னதை இனி மேலாவது கவனிக்கவேண்டும். இவர்கள் தவிர மற்றெல்லாரும் சூத்திரர்கள் என்று தீர்மானம் செய்துவைத்திருப்பதற்கு அவர்களைக் குற்றம் சொல்லுவதை விட நம் அறியாமையின் மௌடீகத்தை என்ன சொன்னாலும் தகும். சூத்திரன் என்பதற்கு அர்த்தம் (வேசிமகன்) சுத்தியிலாதவன், ஆசாரமில்லாதவன், பார்ப்பானுக்கு ஏவற்றொழில் செய்கிறவன் அதற்காகவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவன் எப்பொழுதுந்தூக்கியாக விருப்பவன் என்பது. இந்தகுணத்தோடு கூடின ஜாதி நீங்களானுல் பார்ப்பார்களிடத்தில் எனக்கும் "குடி அரசு"க்கும் சண்டையில்லை. இந்த குணத்தோடு கூடின ஜாதி நீங்களல்லாவிட்டால் பார்ப்பான் புரோகிதத்தையும் அவனுக்குக் கொடுக்கும் தான தருமத்தையும் உடனே நிறுத்தி விடுங்கள் என்று தான் சொல்லுகிறோம் "நெறி ஒழுக்கம் விஸ்வாசமில்லாத பார்ப்பானுக்கு எவன் தானம் செய்கிறானே அவன் குடும்பம் நசித்து அவனும் நரகத்திற்குப் போகிறான்" என்று அவர்கள் எழுதிவைத்த ஸ்மிருதிகளே சொல்லுகின்றன. அதனுல் சாஸ்திரங்களிற்கு பயப்படவேண்டியதில்லை, கடவுள் கோபம் வருமென்று பயப்படவேண்டாம். ஏழைக்கும் திருப்தி விஸ்வாசமுடையவர்கட்கும், கொடுப்பதே கடவுளுக்குப் பிரியம். சமஸ்கிருத பாஷை தான் கடவுளுக்குத் தெரியுமென்று நினைக்காதீர்கள்! எல்லா பாஷைகளும் எல்லோர் மனதில் எண்ணுவது கடவுளுக்குத் தெரியும். இல்லையே கடவுளென்கிற பேரில்லை. வீட்டில் காச்சல் வருவதும் சரக்குவிலை ஏறுவது இறங்குவதும் பார்ப்பான் மந்திரம் சொல்லாததினுலல்ல. மந்திரம் சொல்லிப் பாழான குடும்பங்கள் அனந்தம். நம்மை மதிக்காதவர்களை நாமும் மதிக்கப்படாது. அப்பொழுது தான் சமத்வமேற்படும். அங்கு தான் சுயமரியாதை உண்டு.

"தலைவர்கள் ஸ்வதர்மத்தைச்செய்யும்படி விடவேண்டுமே ஒழிய கட்டாயப்படுத்தக் கூடாது" என்று சபைத்தலைவர் அனந்த கிருஷ்ண சாஸ்திரி சொல்லுகிருர். இவர் மலையாளத்து ஊட்டுப்பிரையில் சோறு தின்று மரத்தடியில் ராமாயணமும் பாரதமும் காலட்சேபமும் செய்து சொம்பைக் குலுக்கி பிச்சை எடுத்துப் பிழைத்தவர்கள் இருந்தால் இவர்களுடைய ஸ்வதர்மம் குருகுலத்தில் படிக்கும் பிரம்மச்சாரிகளான மாணுக்கர்கள் கொண்டுவரும் மதுகரியாகப் பிச்சையை உண்டு வித்தைகற்பிப்பவனே உபாத்தியாயர். 500, 1000 சம்பளம் வாங்கி இங்கிலீஷ் நாகரீகத்துடன் வாழ்கிறவன் பிராமண ஸ்வதர்மமுடையவனுகமாட்டான். மூன்று நாளைக்குமேல் தங்கள் தேவைக்கு வேண்டிய சாமான்களை வைத்துக்கொண்டிருப்பவன் பிராமண தர்மத்திலிருந்து நீக்கினவனுவான். ராவ் சாகிப் பட்டம் மகமதிய ராஜாங்கத்தில் யுத்தத்தில் ஜெயமடைந்த தளகர்த்தர்களுக்கு கொடுக்கும் வழக்கத்தை அனுசரித்து வெள்ளைக்கார ராஜாங்கத்திலும் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தப்பட்டத்தையும் வாங்கி இஞ்சினீர் உத்தியோகமும் பார்த்தவர் பிராமண ஸ்வதர்மத்தை எப்படி நடத்தியிருப்பார்? சேவகா விர்த்தி செய்த பிராமணன் ஒழுக்கத்திலிருந்து தள்ளப்பட்டவன், இந்த பிராமண ஒழுக்கமற்றவர்கள் தான் ஒன்று கூடிக்கொண்டு "அந்தந்த ஜாதியின் ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்கச் சொல்லவேண்டுமே ஒழிய தீண்டாமையை விட வற்புறுத்தக் கூடாது" என்று சொல்லுகிருர்கள். இப்படிச் சொல்லுவது மதத்தாலும், கடவுள் பெயராலும் மற்றவர்களை அடிமை கொள்ளவேண்டுமென்னும் கருத்தே ஒழிய வேறு எதாவதுண்டா? இவர்கள் மாத்திரம் உயர்வதற்கும் லௌகீக சுகங்களைப் பெறுவதற்கும் எவ்வளவு இழிவான காரியங்களை வேண்டுமானுலும் செய்யலாம். இதில் ஸ்வதர்மம் கவனிப்பதில்லை. தீண்டப்படாதவர்கள் ரோட்டில் நடப்பதும், படிக்க வற்புறுத்துவதும் ஸ்வதர்மமல்லவாம்! பார்ப்பானுடைய ஸ்வதர்மமென்ன? படிப்பதும் ஸ்வதர்மமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. தீண்டாமை விஷயங்களில் ஆரிய சமாஜிகள் செய்யும் பிரசாரம் அதன் ஆதி ஸ்தாபகர் தயாநந்த சரஸ்வதியின் கொள்கைகளுக்கும்நோக்கங்களுக்கும், நோக்கங்களுக்கும் விரோத"மென்று சொல்லுகிருர். வியாக்யானம் செய்தும் தங்கள் எண்ணத்திற்கு விரோதமாயிருந்தால் அதைத் திருப்பிச் சொல்லுவது பார்ப்பாரியற்கை. தனக்கு நியாயமில்லை என்றுச் சரியாகப் பட்டாலும் பல விவரங்களைச் சொல்லி நியாயத்தைக் குழப்பி விட்டு விட்டால் இருப்பதில் புத்திமான் சொல்பம். முட்டாள்கள் அதிகம். முட்டாள்களிடமிருந்து நியாயத்தை எடுத்து நியாயத்தைச் சரிப்படுத்திக் காரியத்தை கொண்டுபோய் விடலாமென்பது பார்ப்பானுடைய அனுபோகம். ஆரிய சமாஜத்தில் தீண்டாமை யில்லை என்பது எல்லாருக்குத் தெரியும். தயாநந்த சரஸ்வதிக்குத் தீண்டாமையிருந்தாலும் அவருடைய சிஷ்யர்கள் தீண்டாமையை ஒழித்து விடவேணுமென்ருல் விசேடந்தானே. ஆரிய ரிஷிகளும் அவர்கள் செய்தவேதத்திற்கு உரை எழுதின ஆச்சாரியர்களும் தீண்டாமை வேண்டுமென்று எங்காவது சொல்லியிருக்கிருர்களா? இல்லவே இல்லை. அப்படி இருக்க இப்பொழுதிருக்கும் "சாஸ்திரியும்" "உபாத்தியாயரும்" தீண்டாமையும் ஸ்வதர்மமும் வேண்டுமென்கிருர்கள். இந்தப பார்ப்பாரைவிட ஆரியசமாஜத்தார்கள் எவ்வளவோ மேலல்லவா!

முன் "மத விஷயம் சட்ட சபையில் பேசப்படாது. ராஜாங்கத்தார் குறுக்கிடப்படாது என்று பிராமண சங்கம சொல்லுகிறது." நெற்றியில் இடும் நாமம் பாதம் வைத்தா வைக்காமலா? செத்துப்போனுல் கோவிலுக்குள் போவது பத்து நாளிலா பதினைந்து நாளிலா? எந்த ஜீயருக்கு முதல் மரியாதை? தர்மகர்த்தா பெரியவனு? குருக்களுக்குப் பாத்தியதையா? இதைப்போன்ற அநேக காரியங்கள் மாத்திரம் சர்க்கார் பிரவேசிக்கலாமா? பிராமணர்கள் அநியாயமாகத் தாக்கப்படுகிருர்கள் என்று சொல்லப்படுகிறது, இந்தத் தலைவர் பிறந்த ஊரிலே பிறந்து சிவில், கிரிமினல் என்னும் வக்கீல் தொழிலில் பேரடைந்து இராஜீய வாதியாய் ஆரிய நூல் பழக்கமும் பெற்ற மஞ்சேரி ராமய்யர் என்னும் பிராமணன் கோயம்புத்தூரில் செய்த பிரசங்கத்தை சங்கம் கவனிக்கவேண்டும். "முன் காலத்தில் பிராமணர்கள் எவ்வளவோ நன்மைகள் செய்து வந்தார்கள். அவர்கள் செல்வத்தை விரும்பவில்லை. ஏழு நாளைக்கு அதிகமாகத் தங்கள் தேவைக்கு வேண்டிய சாமான்களை வைத்துக்கொண்டிருக்கவில்லை. உடல், பொருள், ஆவி மூன்றையும் ஜனங்கள் சௌக்யமாகவிருக்கவே உபதேசித்தார்கள். அதனுல் தான் போதிய செல்வாக்கிருந்தது. இக்காலத்தில் அப்பேர்ப்பட்ட பிராமணர் ஒருவரேனும் இருக்கிருர்களா? இல்லை! மாமிசக்கடைகளையும், மீன் கடைகளையும் பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர்கள் எத்தனை? சாராயக் கடைகளிலும், கள்ளுக்கடைகளிலும் டிகிரி போடும் ஆப்காரி உத்தியோகஸ்தர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள். இவர்களும் இன்னுமனேகத் தொழில் செய்கிறவர்களையும் பிராமணர்களென்று எப்படிச் சொல்லமுடியும்? பூணூல் இருப்பதால் மட்டும் உள்ள பிரயோஜனம்? ஒருவன் பூணூலைமட்டும் போட்டுக்கொண்டு விடுவதால் பிராமணனுகி விட முடியுமா? முடியவே முடியாது. எவன் பிரம்மத்தை அறிகிறுனே அவன் தான் பிராமணன். எல்லாம் தெரிந்து உண்மையாக நடக்கும் பிராமணனுக்கு எந்தவித வித்தியாசம் கிடையாது. கடவுளுடைய ஒளியை எல்லாமனிதரிடமும் பார்க்கிருேம். அர்த்தமில்லாத ஆசாரங்கள், ஜாதிப்பெருமை இவைகள் முளைந்தால் தான் நமக்கும் ராஜாங்கத்திற்கும் பிரயோஜனம் உண்டு. (தொடரும்)

---

## கோவையில் திருமணம்.

9—6—27 காலை 7 மணிக்கு திருவாளர் பெரியாஞ்சப்ப கவுண்டருக்கும், சௌபாக்கியவதி அங்கம்மாளுக்கும் திருமணம் இனிது நடந்தேறியது.

பலபெரியோர்கள் விஜயம் செய்திருந்தார்கள் மணமகளும் மணமகனும் நீடூழி வாழ்க.

---

1000 கணக்கான வியாபாரிகள், மாணவர்கள், குமஸ்தாக்கள் திருப்தியடைந்த உலகப்பிரசித்தி பெற்ற

## 5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்

சொர்ப ஆங்கிலம் தெரியாமல் தொழிலில் பெருத்த நஷ்டமடையாதீர்கள் தபால் மூலம் வெகு சுலபமாய் தொழிலுக்கு யாதொரு இடையூறன்றி 1 மாத முதல் 5 மாதத்திற்குள் கற்றுக் கொடுக்கப்படுகிறது நாகை ரேஞ்சு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எழுதுகிருர்;— இங்கிலீஷ் அட்சரங்கள் கூட தெரியாதிருந்தவர்கள் இரண்டு வருஷத்தில் காலேஜ் மாணவர்களுக்கு மேலாக ஆங்கிலத்தில் உபந்யாசிக்க கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தனர். சொற்ப கோர்ஸ்கள் தான் ஸ்டாக்கில் இருக்கின்றன. தங்கள் விலாசத்தை உடனே அனுப்பி பிராஸ்பெக்டஸை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பிரின்சிபல் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட் நாகூர்—

# சேலம்

## சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்காக ஸ்பெஷலாய்

பட்டு ஜரிகைபேட்டுகளினால் தயார்செய்த கதர்

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட கைஸ் நூலினால் பலவிதமான ஜரிகை பேட்டுகளில் தயார்செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி துண்டுகளும் 45 × 5 ஜரிகைப்பேட் மேல் அங்கவஸ்திரங்களும் சேலம் பட்டு குண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார்செய்த 45×9 சேலைகளும் சில தகங்களும் ஜமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும். அத்தாக்ஷி பத்திரம்.

ஸ்ரீமான் C. V. ஜெயகோபாலசெட்டியார் கைநூலால் கைதறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C. V. ஜெய கோபால செட்டியார்,

கதா வியாபாரம், சேலம்



### கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்டமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி தாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிர்ணயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் தாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக காலமாவது க்ஷரம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

நே. ஆறுமுக செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி.

### மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெரிவிக்கக்கூடும் அருமையான ஆருட சாஸ்திரம். உடமொழி நூலை ஆதாரமாகவுடையது. விலை ரூபாய் ஒன்று.

### ஜோதி சாஸ்திரம்

உபாத்தியாயரின்றி 30 நாளையில் ஜோதிஷம் கற்கலாம் எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும். பஞ்சாங்கமின்றி எந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று

மு. வடிவேல் செட்டி,

110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி

புதுச்சேரி.



"அதிவேகு ஆச்சரியம்" என்னும்

ஆருடம்,

கைகண்ட பலன்! தகுந்த விடைகள். தகுந்த விடைகள்! எதிர் கால பலன் கேள்விகள் 6-க்கு ரூபாய் ஒன்று மேற் கொண்டு கேள்வி 1-க்கு அணா நான்கு தபால் செலவு! வேறு இன்னும் வேறுவிஷயங்களுக்கும் நமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி. எஸ். அய்யர்

சுப்ரமணிய உபாசி

பழனி P. O. (S. I.)


### சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு

நாம் இதுவரை வெளியூர்களில் சந்தா பணம் வசூலிக்கவாவது, விளம்பரப்பணம் வசூலிக்கவாவது ஒரு ஏஜண்டுக்காவது அதிகாரம் கொடுக்கவில்லை இப்படி இருக்க "குடி அரசி"ன் பெயரைச் சொல்லி சந்தா சேர்ப்பதாக நேயர்களிடமிருந்து பணம் வசூலித்து விடுகிறார்களென்று கேள்விப்படுகிறோம். ஆகையால் நேயர்கள் யாரிடமாவது பணத்தைக் கொடுத்து விட்டு எமது காரியாலயத்திலிருந்து பத்திரிகையை எதிர்பார்க்க முடியாது. ஆகையால் இவ்வித அசம்பாவிதங்களுக்கு நேயர்கள் ஏமாந்து போகாமல், சந்தாதொகை முதலானதுகளை நேரிலேயே அனுப்பி விடுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்

"குடி அரசு", ஈரோடு.


ரப்பர் முத்திரைகள்.



| | | | |
|---|---|---|---|
| 1. தங்களுடைய மேல் விலாசம் ரபர் ஸடாம்பு (குஷன்வைத்தது) | ரூ. | 2 | 8 |
| 2. கையெழுத்து ஸ்டாம்பு ... | ,, | 3 | 8 |
| 3. பித்தளை அரக்கு வில ... | ,, | 2 | 0 |
| 4. வெள்ளி பித்தளை அரக்கு வில் | ,, | 3 | 12 |

நேயர்களே! வேலைப்பாடு அழகாகவும் திருப்தியாகவும் இருக்கவேண்டுமானால் அநேக வருஷத்திய அநுபவமுடைய எங்களிடமே உங்களுடைய ஆர்டரயனுப்புங்கள். ஸ்ரீதாய் கம்பெனி,

ஜார்ஜ்டவுன், மதராஸ்



சேலம் மாம்பழம்.

தினசரி விலவரத்திற்கு முதல்தரமாக பொருக்கி எடுத்தனுப்புகிறேன். முதல்தரம் குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கு பாக்கிங் அண்டு ரெயில்சார்ஜ சேர்த்து 100 க்கு ரூ. 7. 2-ம் தரம் 100 க்கு ரூ. 5. ஒட்டுமாங்கன்று சீமை காய்கறி புஷ்பவிதைகளுடைய 1927ஞ்வத்திய கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.



நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—

உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.



குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

## அமெரிக்கன் ஸில்க்.

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

முன் விலை ரூ. 14. இப்போழுது ரூ 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் ஜ்ரேக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டு.

CANADIAN WATCH PEOPLE.
George Town, Madras.

டிடக்டாவை அல்லது
துப்பறியும் (ரகசியம்) கருவி.



இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனால் ஏககாலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்து கொள்ளலாம். மேனாட்டார் கண்டு பிடித்த கருவி இது. பல கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

“மலாய் நாட்டிலுள்ளவர்களுக்கு கண்டிப்பாய் வி. பி. மூலம் அனுப்பமுடியாது. முன்பணமாவது போஸ்டல் ஆர்டராவது அவர்கள் அனுப்ப வேண்டும்”.

பாரிஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்

கதர்ப் பத்திரிகைக்கு
வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

“குடி நூல்”

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்விட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று நிர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்த்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

கதர்! கதர்!! கதர்!!!

எல்லாம் திருப்பூர் கதர்

கதர் பனியன்கள் கதர் சேலைகள்

கதர் வேஷ்டிகள்

முதலான எல்லா தினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

மா. வெ. கருப்பண செட்டியார்,
கதர் வியாபாரம்,
திருப்பூர். (தென்னிந்தியா.)

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)



காகித நாடா சேலை
16 முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம்

இது பார்வைக்கு மிகவும் சோத்தியாகவும் சுற்றிலும் பூக்கொடிகள்போட்டு மத்தியில் பெரிய பூக்கள் உள்ளது விலை ரூபாய் 5—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி
பார்க்டவுன், மதராஸ்.

மூன்று மாதத்தில்
மோட்டார் ஓட்ட கற்றுக்
கொள்ளலாம்
1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

தாய்மார்கள்
கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபால் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—சாத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும மருந்தாலும் சிகித்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்தரீக டாக்டர்
இனாம்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைசயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஸ்கை கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசிகரத்தோற்றமுள்ளது.

$2\frac{3}{4}$ அகலம் 18 முழம் புடவை … ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
வலிக் அங்க வஸ்திரம் … … ரூ 4—8—0
$2\frac{3}{4}$ அகலம் $7\frac{1}{2}$ முழம் அழுத்தமான கை
செவு வேஷ்டி ஜோடி … … ரூ. 4—6—0

“ஸ்பெஷல்” கேட்லாக் இனாம்!

The Madura Griental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு “உண்மை விளக்கம்” பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.